கேலக்ஸியின்

விண்மீன்

மின்னிதழ்

இதழ் 2

ஜுலை 2025

‘கதையின் போக்கில் பயணிக்கும் பயணி’

எழுத்தாளர் தெரிசை சிவா நேர்காணல்

ஜப்பானிய ஹைக்கு
தொடக்கமும் தொடர்ச்சியும்

ஒற்றைச் சிறகு ஓவியா

www.galaxybs.com

GALAXY BOOK
SELLERS & PUBLISHERS

ISBN 978-0-99-702549-1
9 780997 025491

விண்மீன்
மின்னிதழ்

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல
தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே
நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.
- நாலடியார்

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
- ஔவையார்

பதிப்பாளர்
பாலாஜி பாஸ்கரன்

ஆசிரியர்
பரிவை சே குமார்

வடிவமைப்பு
சென் பாலன்

Published by
Galaxy Book Sellers & Publishers

Print Partners
Printech, UAE

Travel Partner
FJ Tours & Travels, UAE

Galaxy Book sellers & Publishers
www.galaxybs.com
+91 99944 34432

தற்கொலை தீர்வல்ல

சமீபத்தில் பரபரப்பாய் இரண்டு இறப்புக்கள் பேசப்பட்டன. அதில் ஒன்றுதான் திருப்பூர் ரிதன்யாவின் வரதட்சணை தற்கொலை. பலர் பேசினார்... பல விசயங்கள் பேசப்பட்டன.

இப்போது இணையம் உலகத்தை உள்ளங்கைக்குள் கொண்டு வந்து விடுவதால் உலகின் எந்த மூலையில் என்ன நடந்தாலும் அது குறித்த எதிர், ஆதரவு வாதங்கள் இணையமெங்கும் விரவிக் கிடக்கின்றன. இந்த விவாதங்களின் ஆயுட்காலம் அடுத்த பரபரப்பான நிகழ்வு வரையோ அல்லது மிஞ்சி மிஞ்சிப் போனால் அடுத்த நாலைந்து நாள் வரையோதான்.

இந்த வரதட்சணை கொடுமைகள், கொலைகள் இப்போதுதான் நடைபெறுகிறதா என்றால் அப்படியொன்றும் இல்லை. காலம் காலமாய் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இப்படியான கொலைகள் அல்லது தற்கொலைகள் கிராமங்களில் அதிகம் நடைபெறும். அப்போதெல்லாம் ஊரே பேசி ஒரு முடிவுக்கு வந்து நிகழ்வு வெளியே தெரியாமல் குறிப்பாக காவல்துறை பக்கம் போகாமல் காதும் காதும் வைத்த மாதிரி காரியத்தை முடித்து விடுவார்கள்.

2000-க்கு முன்பு வரை இப்படித்தான் வரதட்சணை சாவுகளும் ஆதிக்கச் சாவுகளும் மறைக்கப்பட்டன. அதன் பின்னான காலங்களில்தான் இந்தச் சாவுகள் எல்லாம் பொதுவெளிக்கு வர ஆரம்பித்தன. அவற்றை எல்லா இடத்துக்கும் அரியச் செய்ததில் சமூக வலைத்தளங்களுக்கு அதீதப் பங்கு உண்டு என்றாலும், சாதி, மதம், அரசியல் பார்த்துத்தான் அவற்றிலும் நாம் கடமையாற்றுகின்றோம் என்பதுதான் வருத்தமான, கேவலமான விசயம்.

ரிதன்யா சாவில் வரதட்சணையாக கொடுத்த நகையில் இன்னும் தரவேண்டிய பாக்கியும் வேணும் எனக் கேட்கும் மனநிலையும், கேவலமான, வக்ரமான தாம்பத்ய கேவலங்களும்தான் காரணம். பணமிருப்பவர்களே இப்படி என்றால் இல்லாதவர்கள் வீடுகளில் நடக்கும் கொடுமைகள் சொல்லவே வேண்டாம். கொடுக்க வேண்டிய ஒரு பவுனுக்காக அடித்துக் கொன்றதையும், குடிகாரனாய் இருக்கிறான் எனச் சண்டை போட்டதால் அடித்துக் கொன்றதையும், தான் பிறந்த வீட்டில் இதற்கு மேல் கொடுக்க முடியாது எனத் தெரிந்ததால் அவர்களின் கொடுமைக்கும் தன்னைப் பெற்றோரின் விடுதலைக்குமாய் தன்னையே மாய்த்துக் கொண்டவரையும் பார்த்திருக்கிறேன்.

படிக்கும் காலத்தில் இன்னும் நிறைய கொலைகள், தற்கொலைகளைப் பார்த்தும், கேட்டுமிருந்தாலும் இவர்கள் எல்லாம் அதிகம் படிக்காத கிராமத்துப் பெண்கள். அவர்களைப் பொறுத்தவரை அது மட்டுமே தீர்வென நம்பும் வெள்ளந்தி, வெகுளி மனசுக்குச் சொந்தக்காரகளாய் வாழ்ந்து விட்டுப் போனவர்கள். ஆனால் இன்றைய பெண்கள் அப்படியா..?

சுயமாய் என்னால் நிற்க முடியும்... நின்று காட்டுவேன் என்பதாய் வாழ எல்லா வகையிலும் தங்கள் தகுதியை உயர்த்தி வைத்திருப்பவர்கள். குறிப்பாக கல்வித் தரத்தில் உயர்ந்திருப்பவர்கள். எந்த விசயத்திலும் தங்களால் தனித்து முடிவெடுக்க முடியும் என்பதை உணர்ந்தவர்கள். அப்படியிருந்தும் கொடுமையில் இருந்து மீள, பிறந்த வீட்டாரும் புரிந்து கொள்ளாத நிலையில் இதுதான் முடிவெனப் போவதுதான் வேதனையாய் இருக்கிறது. நம்மிடம் தனித்து நிற்க எல்லாமே இருக்கும் போது எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு என்னைப் புரிந்து கொள்ளாத யாருமே எனக்கு வேண்டாம் என்று தனித்து வாழ்ந்து காட்ட வேண்டும். சாவல்ல முடிவு, வாழ்வதே நிறைவு.

இப்படியான மரணங்கள் நமக்குச் சொல்வதெல்லாம் நம் பிள்ளைகளை நாம் படிக்க வைத்து விட்டோம், அவள் தனியே சிறகை விரித்துப் பறந்து செல்வதையும் பார்த்து மகிழ்ந்து விட்டோம். இனி இந்தப் பரந்த உலகில் எங்கும் வாழ்ந்து விடுவாள் என்ற எண்ணத்தை மூட்டை கட்டி ஓரமாய் போடுங்கள் என்பதைத்தான். படிப்பு, பதவி என்பதெல்லாம் விடுத்து அவர்களுக்கு வாழ்க்கை என்பது என்ன..? வாழப் போகும் இடத்தில் பிரச்சினைகள் வந்தால் அதை எப்படிச் சமாளிக்கலாம்..? இது அந்தக் காலம் இல்லை கட்டியவனே கோவில் எனத் துன்பங்களைச் சுமந்து வாழ, உனக்கான வாழ்வை நீயே தீர்மானிக்கும் காலமிது என்பதால் கொடுமைகளை அல்லது கொடுமைக்காரர்களைப் புறந்தள்ளி எப்படி வாழப் பழகிக் கொள்ள வேண்டும்... குறிப்பாக தற்கொலை என்பது எதற்கும் முடிவல்ல, வாழ்ந்து காட்டுவதில்தான் வெற்றி இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும்.

இனி அப்படியே பெண் குழந்தைகளை வளர்ப்போம், வலி நிறைந்த மரணங்களைத் தவிர்ப்போம்.

பரிவை சே குமார்

இதழில்....

ஜப்பானிய ஹைக்கு - தொடக்கமும் தொடர்ச்சியும்-
ச.கமலக்கண்ணன், ஜப்பான் - 01

ஒற்றைச் சிறகு ஓவியா - இராம. சௌமியா - 03

‘கதையின் போக்கில் பயணிக்கும் பயணி’ தெரிசை சிவா
-தேவதர்ஷினி பாலாஜி - 04

ஜாடை - ஷோபனா நாராயணன் - 06

பூதத்தின் அடிமைகள் - அ.ஈடித் ரேனா - 08

தாவணி கோவிலில் காவடி சிந்துகள் - ஆர்.வி.சரவணன் - 09

அரேபியாவின் ஆபரணம் - சென் பாலன் - 10

சூஃபியின் முத்தம் - அம்முராகவ் - 12

யார் நீ? - ஸ்ரீராம் - 13

குருட்டுக் கோழிகள் - புனிதா பார்த்திபன் - 15

உரையாடல்கள் - பால்கரசு சசிகுமார் - 16

நிலை மாறும் உலகில்...- கார்த்திகேயன் மாதயன் - 18

சிட்டுக்குருவியின் சாபம்...- செழியன் - 20

காதலிக்க நேரம் உண்டு - சுதா திருநாராயணன் - 21

சினிமா பார்வை : ரோந்த் - பரிவை சே குமார் - 22

ஜப்பானிய ஹைக்கு தொடக்கமும் தொடர்ச்சியும்



ச.கமலக்கண்ணன்,
ஜப்பான்

ஹொக்கு(Hokku). இதுதான் ஹைக்கு(Haiku) என்று 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் புலவர் மஸாவொகா ஷிகி (MasaokaShiki) அவர்களால் பெயரிட்டப்பட்ட பாவகையின் மூலப்பெயர். கி.பி 1356இல் புலவர் நிஜோ யொஷிமொதோ (Nijou Yoshimoto) என்பவர் ரெங்கா (Renga ரென் - தொடர், கா - கவிதை) எனும் தொடர்கவிதை வடிவத்தை உருவாக்கினார். ஒரு கவிதையின் ஒவ்வொரு கண்ணியையும் ஒவ்வொரு கவிஞர் எழுதும் முறை இது. அந்தாதி போல முதல் கண்ணி முடியும் சீரை வைத்து அடுத்த கண்ணி தொடங்கவேண்டும் என்ற அவசியமில்லை. பொருள் தொடர்ச்சி இருந்தால் போதும். நம் கலிப்பாவில் தரவு, தாழிசை, சுரிதகம் என்று இருப்பதுபோல இந்த ரெங்காவிலும் ஹொக்கு(Hokku), வகி(Waki), தாய்சான்(Daisan), அகேகு(Ageku), கோக்யோ(Kougyou) என அடுக்கப்பட்டிருக்கும்.

நமது சங்கப்பலகை போல ரெங்கா கூடல்களும் அக்காலத்தில் நடைபெற்றுள்ளன. பல கவிஞர்கள் சேர்ந்து ஆளுக்கொரு கண்ணியாக இயற்றியிருக்கிறார்கள். முதலில் நிஜோ அவர்கள் தொகுத்தது ஏற்கனவே இயற்றப்பட்ட பாடல்களைத்தான். பின்னர் காலப்போக்கில் விருந்துகளிலும் ஒன்றுகூடல்களிலும் விளையாட்டாகவும் போட்டியாகவும் அரங்குகளில் உடனடி ரெங்கா இயற்றும் முறை தொடங்கியது.

முதல் கண்ணியான ஹொக்குவைச் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டவர் 5-7-5 என்ற சீர்க்கணக்கில் மூன்றடிக் கண்ணியாக இயற்றுவார். இதிலேயே பாடுபொருள் வெளிப்படுத்தப்பட்டுவிடும்.
இரண்டாவது கண்ணியான வகியை நிகழ்வுக்கு அழைப்பு விடுத்தவர் 7-7 என்ற ஈரடிக் கண்ணியாக இயற்றுவார். இவ்விருவர்க்கு அடுத்து வயதில் மூத்தவர் தாய்சான் எனப்படும் மூன்றாம் கண்ணியை மீண்டும் 5-7-5 என்ற சீர்க்கணக்கில் இயற்றுவார். அடுத்து வரும் அகேகுவும் கோக்யோவும் இதே சீர்க்கணக்கில்தான் அமையும்.

ஹொக்கு, வகி, தாய்சான் ஆகியவை ஒரு ரெங்காவுக்கு ஒன்று மட்டுமே பயின்றுவரும். அகேகு மட்டும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை அமையும். பாடலின் நீளத்தைத் தீர்மானிப்பது இவற்றின் எண்ணிக்கைதான். இந்த அகேகுவின் இறுதிச்சீரானது அடுத்த கவிஞர் அடுத்த கண்ணியை இயற்றுவதற்கு ஏதுவாக இறந்தகால வினையெச்சமாக இருக்கவேண்டும். இதுவும் சீர்க்கணக்கும் மட்டுமே இப்பாவகையின் இலக்கணங்கள். கோக்யோ இறுதிக் கண்ணியாதலால் இதுவும் ஒன்று மட்டுமே வரும். தொடர்கவிதையை முடித்துவைக்கவேண்டும் என்பதால் இந்தக் கோக்யோவை இயற்றுவதுதான் மிகவும் கடினம் என்பார்கள்.

இப்பாவகை 14ஆம் நூற்றாண்டிலிருந்து இலக்கியத்தில் இடம்பெற்றாலும் கி.பி 6ஆம் நூற்றாண்டிலேயே ஹொக்குவையும் வகியையும் உள்ளடக்கிய தான்கா(Tanka) வகைப்பாடல்கள் 5-7-5-7-7 என்ற ஐந்தடிக் கண்ணிகளாக இயற்றப்பட்டு வந்தன. மான்யோஷு (Manyoushu பத்தாயிரம் ஏடுகளின் தொகுப்பு), ஹ்யாக்குநின் இஷ்ஷு (Hyakunin Isshu நூறு புலவர்கள் நூறு பாக்கள்) ஆகிய முற்கால இலக்கியங்களில் இவை இடம்பெற்றிருக்கின்றன. இந்தத் தான்காதான் இதுவரை இயற்றப்பட்ட மிகச்சிறிய ரெங்கா ஆகும். ரெங்கா கூடல்களுக்குச் சுவைகூட்ட வேண்டிப் பல புதுமைகளும் இதில் புகுத்தப்பட்டன. உதாரணமாக ஜப்பானிய அரிச்சுவடியின் 46 எழுத்துக்களில் தொடங்கும் 46 கண்ணிகளைக் கொண்ட ரெங்கா இயற்றும் முறையைக் கூறலாம். மிகப்பெரியதாக நூறு கண்ணிகளைக் கொண்ட ரெங்காக்கள் வரை இயற்றப்பட்டிருக்கின்றன.

இந்த ரெங்கா விளையாட்டின் பக்கவிளைவாக இன்னொரு விபரீதமும் நடந்தது. ஏற்கனவே இலக்கியங்களில் இருக்கும் ஏதோவொரு அடியை முதலடியாகக்கொண்டு அடுத்த அடியை இவர்கள் எழுதுவது. திருக்குறளில் இருக்கும் முதல் அடியை எடுத்துக்கொண்டு இரண்டாம் அடியை நாமே எழுதுவது போன்றது. இந்த அளவில் ஆபத்து ஏதுமில்லைதான். ஆனால் நகைச்சுவை என்ற பெயரில் ஆபாசத்தை அள்ளி இறைத்திருப்பதுதான் அதிர்ச்சியளிக்கிறது. உதாரணமாக "பனிக்காலத்தில் உடையின் விளிம்பு சற்றே நனைந்துள்ளது" என்ற புகழ்பெற்ற முதலடியை எடுத்துக்கொண்டு "இளவரசி சாஹோ நின்றுகொண்டே சிறுநீர் கழித்ததால்" என்று முடித்திருக்கிறார்கள். 15ஆம் நூற்றாண்டின் சிறந்த கவிஞர்களுள் ஒருவராகப் பாராட்டப்பட்டிருக்கும் யமாசாகி சோகான் (Yamazaki Soukan) என்பவரே இப்படி எழுதியிருப்பதுதான் வேதனை. இவரது கவிதைகளைத் தொகுத்தவராவது இதுபோன்றவற்றைத் தவிர்த்திருக்கலாம். ஒருவேளை அவருக்கு அசிங்கமாகத் தெரியவில்லையா அல்லது இதுவும் கவிஞர் எழுதியதுதானே, இப்படியும் எழுதுவார் என வரலாற்றில் பதிவாகட்டும் என விட்டுவிட்டாரா எனத் தெரியவில்லை.

இங்கு நாம் நம் சங்கத்தமிழ்ப் பாவகைகள் பல சீர்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதை நினைவுகூர்ந்து 5-7-5 என்பதைச் சீர்க்கணக்கு என்கிறோம். ஆனால் ஜப்பானியமொழிப் பாக்களில் இதை அசையாகத்தான் கொள்கிறார்கள். அசைக்கணக்கு என்றுதான் சொல்லவேண்டும். ஐந்தசைசீர் - ஏழசைச்சீர் - ஐந்தசைச்சீர் என மூன்றே மூன்று சீர்களைக் கொண்டதுதான் ஜப்பானிய ஹைக்கு. இச்சீர்களில் பெயர்ச்சொல் அல்லது வினைச்சொல் அல்லது பண்புத்தொகையுடன் சேர்ந்து வேற்றுமை உருபுகளும் அடங்கும்.

இந்த ரெங்காவின் முதல் கண்ணியான ஹொக்குதான் பிற்காலத்தில் ஹைக்குவாகப் பிரிந்து வந்தது. சிறப்பு விருந்தினர் பாடுபொருளை வெளிப்படுத்தும் விதமாக இயற்றியதால் அடுத்த பாடல்கள் இல்லாவிடினும் முழுமையான பொருள் தருவதாக இருந்ததே இதற்குக் காரணம் என்கிறார்கள். 17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை இது ஹொக்கு என்ற பெயரிலேயே தொடர்ந்து வந்தது. இன்றும் ஹைக்குவின் பிதாமகராகக் கொண்டாடப்படும் மட்சுவோ பாஷோ (Matsuo Bashou) இதற்கு ஹைகாய் (Haikai) எனப் பெயரிட்டார். புகழ்பெற்ற "பழையகுளத்தில் தவளை" ஹைக்குவை இயற்றிய கவிஞர் பாஷோ ஹைக்குவின் கடவுளாகக் கொண்டாடப்படுவதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை.

இவர் கவிஞர் என்றாலும்கூட இவரது பயண இலக்கியமான "காலநிலை வெளிப்படுத்திய எலும்புக்கூடு" என்ற நூலும் வாசிப்பாளர்களின் பெருவரவேற்பைப் பெற்றதாகும். இவர் மேற்கு ஜப்பானில் உள்ள மியே (Mie) மாநிலத்தின் இகா உவேனோ (IgaUeno) என்ற இடத்தில் கி.பி 1644இல் பிறந்தவர். சாமுராய் வம்சத்தில் பிறந்தாலும் போர்கள் குறைந்துகொண்டே வந்த 17ஆம் நூற்றாண்டில் சாமுராய்கள் செல்வாக்கிழந்து பல்வேறு தொழில்களை மேற்கொண்டிருந்தனர். இவரது தந்தை வேளாண்மை செய்துவந்தாலும் சாமுராய் வம்சம் என்பதால் அதற்குரிய சில சலுகைகளையும் பெற்று வந்தார். இவர் சிறுவயதிலேயே யொஷிததா (Yoshitada) என்பவரிடம் உதவியாளராகப் பணிக்குச் சேர்ந்தார். யொஷிததாவுக்கு ரெங்கா கவிதைகளின் மீதிருந்த ஆர்வம் பாஷோவுக்கும் தொற்றிக்கொண்டது.

கி.பி 1665இல் இவரும் யொஷிததாவும் இன்னும் சில நண்பர்களும் இணைந்து 100 கண்ணிகள் கொண்ட நீள்ரெங்காவை இயற்றினர். யொஷிததாவின் ஆசிரியர் கியோத்தோவில் வசித்துவந்த கிதாமுரா (Kitamura) இந்நீள்ரெங்காவின் முகப்பு ஹொக்குவை எழுதித் தந்தார். முடிவில் இந்நூறில் 18 கண்ணிகள் பாஷோவினுடையதாக இருந்தன. பாஷோ, யொஷிததா இருவரின் கவிதைகளிலும் கிதாமுராவின் பாதிப்பு அதிகம் இருந்தது. பாஷோவின் வாழ்வின் மிக மகிழ்ச்சியான காலகட்டம் அது. ஆனால் அடுத்த ஆண்டு நிகழ்ந்த யொஷிததாவின் திடீர் மரணம் அந்த மகிழ்ச்சியை முடிவுக்குக் கொண்டுவந்தது. இந்நிகழ்வு அவரைத் தற்கொலைக்கும் தூண்டியது. ஆனால் அவர் பின்பற்றிவந்த ஷிண்டோ (Shinto) மதம் தற்கொலை தவறென்று கூறுவதால் அம்முடிவைக் கைவிட்டார். இருபத்தி இரண்டே வயதான அவரது மீதமுள்ள வாழ்வைக் கவிஞராகக் கழிப்பதா, சாமுராயாக மாறுவதா எனக் குழப்பத்தில் ஆழ்ந்தார். பின்னர் சாமுராய் வாழ்வைத் துறந்து கவிஞராக மாறினார். இம்முடிவுக்கான காரணம் வரலாற்றில் எங்குமே காணப்படவில்லை. "எந்தப் பக்கம் சாய்வது என்ற குழப்பம் என் வாழ்வை அமைதியற்றதாக ஆக்குகிறது" என அவரே ஒரு படைப்பில் குறிப்பிட்டிருப்பதைத் தவிர. ஷிண்டோ மதக்கோயில் ஒன்றில் இருந்த பெண் துறவி ஒருவரைக் காதலித்ததாகவும் அதனாலேயே கவிதைவாழ்வைத் தேர்ந்தெடுத்தார் என்றும் 1956இல் ஒகாமுரா (Okamura) என்பவர் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அதற்குச் சான்றுகள் எதையும் அவர் தராததால் ஐயம் திரிபற உறுதிப்படுத்த முடியவில்லை.

இவரது கவிதைகளில் வெளிப்பட்ட தனிப்பட்ட வாழ்வைப் பற்றியும் சில வரலாற்றாசிரியர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். இவர் ஓர் ஓரினச்சேர்க்கையாளர் என்று Gregory M. Pflugfelder(1999) (Cartographies of Desire: Male-Male Sexuality in Japanese Discourse, 1600–1950) என்பவரும் இவரது கவிதைகளில் ஓரினச்சேர்க்கை குறித்து எழுதியிருப்பதெல்லாம் இவரது சொந்த அனுபவங்களே என்று Leupp, Gary P. (1997) (Male Colors: The Construction of Homosexuality in Tokugawa Japan) என்பவரும் தத்தம் நூல்களில் குறிப்பிட்டிருக்கின்றனர். உவேனோவிலிருந்து அப்போதைய தலைநகர் கியோத்தோவுக்கு இடம்பெயர்ந்ததற்கு இது காரணமாக இருந்திருக்கலாம் என ஊகிக்கிறார்கள்.

-தொடரும்

ஒற்றைச் சிறகு ஓவியா

இராம. சௌமியா
பாரதி நகர், முகவை

இவ்வுலகில் இருக்கும் அனைவருக்கும் ஆசைகள் ஆயிரம். குழந்தையாக இருந்தாலும் பெரியவர்களாக இருந்தாலும் ஆசைகளில் ஒன்றாக, அதிகம் விரும்புவதாக இருப்பது ஒரு பறவையைப் போல உயரே பறக்க வேண்டும் என்பதுதான். இந்த ஆசை எனக்குள்ளும் இருந்தது. அச்சமயத்தில் எனக்குக் கிடைத்த இந்தப் புத்தகத்தில் ஒற்றைச் சிறகோடு இருக்கும் ஓவியாவுடன் நான் மற்றொரு சிறகாய் இருந்து இந்த நாவலைப் படித்தேன்.

விஷ்ணுபுரம் சரவணன் எழுதிய இந்நூல் அவருக்கு பால புரஸ்கார் விருதைப் பெற்றுத் தந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இவர் விகடன் குழுமத்தில் பணி புரிந்தவர் ஆவார். இந்நூல் இவருடைய இரண்டாவது நாவல்.

இக்கதையில் ஐந்து நண்பர்கள், அவர்கள் எப்போதும் சேர்ந்தே இருப்பார்கள். ஒருநாள் பள்ளி ஆண்டு விழாவுக்காக ஓவியாவைத் தவிர மற்ற நால்வரும் நாடகத்தில் இணைந்திருந்தனர். அவர்கள் அணிந்திருந்த அணிகலன்களில் ஒவ்வொன்றையும் ஓவியாவுக்கு அணிவித்து அழகு பார்த்தனர். அப்படியாக அவர்கள் அணிவித்த ஒற்றைச் சிறகுகள் அவளைப் பறக்க வைத்தன. அதனைக் கொண்டு பள்ளியில் ஒரு மாயாஜாலத்தை நிகழ்த்தினர். அது என்னவென்றால் 'இரகசியம்'.

அதற்குப் பயன்படக்கூடிய முக்கியப் பொருளாக இருந்தது பள்ளி மணியை அடிக்கப் பயன்படுத்தப்பட்ட பச்சை நாக்கு. இம்மாயாஜாலத்தை பள்ளி ஆண்டு விழாவில் நடத்த எண்ணினர். அப்போது அதே பள்ளியில் படிக்கும் மற்றொரு மாணவன் அதனை - பச்சை நாக்கு - எடுத்து நான்கு துண்டுகளாகப் பிரித்து வெவ்வேறு இடங்களில் மறைத்து வைத்தான். அவனுக்கு உண்மையிலேயே மந்திரம் செய்வதற்குத் தெரியும் என்பதால் மறைத்து வைத்த இடங்களின் குறிப்புகளைத் தன் நண்பர்களின் கனவுகளில் மறைத்து வைத்தான்.

ஓவியாவிற்கு ஒருவருடைய கண்ணைப் பார்த்து அவர் எண்ணுவதைச் சொல்ல முடியும் என்பதால் ஒவ்வொரு குறிப்புகளின் மூலமாக ஒவ்வொன்றையும் கண்டுபிடித்து, நான்கையும் ஒன்றிணைத்து அவர்கள் நினைத்தது போல ஆண்டுவிழாவில் மாயாஜாலத்தை நிகழ்த்தினர்.

இந்த நாவலில் ஓவியாவும் அவளது நண்பர்களும் எங்கெல்லாம் அந்த நான்கு துண்டுகளாக்கபட்ட பச்சை நாக்கைத் தேடினார்கள் என்பதையும் அப்படித் தேடும்போது அவர்களுக்குக் கிடைத்த அனுபவம் என்ன என்பதையும் மிக அழகாக காட்சிப்படுத்தியிருக்கிறார் ஆசிரியர்.

இந்நாவலை வாசித்ததன் மூலம் எனக்குச் சிறந்த அனுபவமும் ஆச்சர்யங்களும் கிடைத்தன. அவை உங்களுக்கும் கிடைக்க நீங்களும் இந்நாவலை வாசிக்கப் பரிந்துரைக்கிறேன்.

யாமறிந்த, வாசித்த சிறந்த சிறார் நாவல்களில் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றிருக்கும் நாவல் எதுவென்றால், என்னளவில் நான் ஒற்றைச் சிறகு ஓவியாவைச் சொல்வேன்.

‘கதையின் போக்கில் பயணிக்கும் பயணி’ எழுத்தாளர் ‘தெரிசை’ சிவா

தொகுப்பு : திருமதி. தேவதர்ஷினி பாலாஜி, ஷார்ஜா, அமீரகம்

எழுத்தாளர் தெரிசை சிவா, கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட, மேற்குத் தொடர்ச்சி அடிவாரத்தில் இருக்கும் தெரிசனங்கோப்பு என்னும் அழகிய கிராமத்தில் பிறந்தவர்.

தற்போது பாலைவனப் பூமியில் – அமீரகத்தில் – வேதியியல் துறையில் பணி புரிகிறார். வெளிநாட்டில் வேலை பார்த்தாலும் எழுத்தின் மீதான காதலால் தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பவர். இவரின் கதைகள் வட்டார வழக்கில் எழுதப்படுவதால் மண்ணின் மணத்தோடும், கிராமத்திற்கே உரிய நக்கல், நையாண்டி நகைச்சுவையுடனும் இருக்கும்.

இவரின் பல கதைகள் பேசப்பட்டாலும் குறிப்பாக ‘சடலச்சாந்தி’ என்னும் சிறுகதை பலரால் பாராட்டிப் பேசப்பட்டது. அதேபோல் ‘முடியன்’ மற்றும் ‘அண்டி’ சிறுகதைகள் வாசித்தவர்கள் அதைப் பற்றி மற்றவர்களிடம் பேசாமல் இருப்பதில்லை, அந்தளவுக்கு அக்கதைகள் வாசிப்பவரை வாய்விட்டுச் சிரிக்க வைப்பவை.

இதுவரை 'குட்டிக்கோரா', 'திமில்', 'தாச்சி' என்னும் சிறுகதை தொகுப்புக்களும், 'ரூபிணி', 'தகர்' என்னும் நாவல்களும் எழுதியிருக்கிறார். விரைவில் கேலக்ஸி வெளியீடாக, வித்தியாசமான கதைக்களத்தில் ‘அயலோன்’ நாவல் வர இருக்கிறது.

நமது கேலக்ஸியின் மண்ணின் மணத்தோடு எழுதும் எழுத்தாளருக்கான 'பாண்டியன் பொற்கிழி' விருதை இந்த ஆண்டு பெற்றிருக்கும் தெரிசை சிவா, நமது விண்மீன் இதழுக்காக கொடுத்த சிறப்புப் பேட்டி...

தங்களுக்கு எழுத்தார்வம் எப்போது ஏற்பட்டது?

“நான் ஊர்புறத்துல கிராமத்துல இருந்து வந்தவன். அந்த காலத்துல சாயங்காலம் நேரத்துல அரசமூட்டுல, குளத்தான் கரையில, வீட்டு படிப்புரையில கதை கேக்குறதுதான் பொழுதுபோக்கு. அப்பவே நான் பக்கத்து வீட்டுக் குழந்தைகளுக்கு ஏதேதோ கதை சொல்லி தூங்க வைப்பேன். அதே மாதிரி நான் தூங்குறதுக்கும் பத்து கதை தேவைப்படும். இப்ப நினைச்சு பார்த்தா... அது தான் நான் எழுதுறத்துக்கான விதைன்னு தோணுது.

சிவா - தெரிசை சிவா ஆனது பற்றி..?

“ஊர் திருவிழா நேரத்துல "தெரிசை இளைஞர்கள்னு" பேரு போட்டு பேனர் வைக்கிறது பெரிய கௌரவமா தோணும். என் ஊர் பேரை எப்போதும் நினைவில் வைக்கனும் நெனச்சேன். அதுக்காக என் பேரோட சேர்த்து ‘தெரிசை’ன்னு சேர்த்தேன். ஆனா இப்ப அதுவே என்னோட பிராண்டாக ஆகிடுச்சு!”

உங்கள் கதைகளில் நகைச்சுவை இழையோடுவது - உங்கள் பேச்சும் அப்படித்தான் - எதார்த்தமானதா அல்லது அப்படியான கதைகளை அதிகம் விரும்பி எழுதுவீர்களா..?

நான் வளர்ந்த சூழ்நிலை, சுற்றியிருந்த நண்பர்கள் அதுக்கு காரணமா இருக்கலாம்னு நினைக்கிறேன். ரெம்ப இறுக்கமான சூழ்நிலைகளிலும் எங்கூருல சிரிக்க ஆளுங்க உண்டு. செத்த வீட்டுல கூட, பொட்டி சிரிக்க வைக்கும் கிருத்தரக்காரர்கள் நிறைஞ்ச ஊராக்கும். அதுதான் என் எழுத்துல அங்கங்க என்னையும் அறியாம வெளிப்படுதுன்னு நினைக்கிறேன்.

தங்கள் நாவல்களின் களங்கள் மிகவும் வித்தியாசமாக இருக்கிறதே, அவற்றை எப்படித் தேர்ந்தெடுக்கிறீர்கள்..?

என் கதைகளை இவரோட கதைமாதிரி இருக்குன்னு சொல்லக்கூடாதுன்னு நினைப்பேன். எந்த சாயலும் இல்லாம எழுதணும் நினைப்பேன். நான் விரும்புற உலகம், கடந்து போக நினைக்கும் காலம், கட்டுடைத்து கரையேறும் கதைமாந்தர்கள்... இவைகள்தான் என் கதைக்கான அடித்தளம்.

நாவல் - சிறுகதை இதில் எது எழுதுவது தங்களுக்குப் பிடித்தமானது..?

இரண்டுமேதான். வெயில்ல அலைஞ்சிட்டு மோர் குடிக்குற மாதிரியும், ஆற அமர உக்காந்து பிரியாணி சாப்பிடுற மாதிரியும்தான் சிறுகதையும் நாவலும். எழுத நினைச்சதை சுவையோட எழுதி முடிக்க வைக்குற 'ருசி' மட்டும் குறையாம பார்த்துக்கிடணும். அவ்வளவுதான்.

கதை எழுதும் முன்னர் யோசித்து வைத்து எழுதுவீர்களா அல்லது எழுத ஆரம்பித்து கதையின் போக்கில் பயணிப்பீர்களா..?

கதைக்கான முக்கியமான திருப்பங்கள் மட்டும் மனசுல வைத்திருப்பேன். ஆனா எழுத ஆரம்பிச்சவுடன் கதாபாத்திரங்கள் எனக்கு கட்டளையிடுவாங்க. நான் கதை போகுற போக்கில் பயணிக்கும் பயணி மாதிரி!

சினிமா பக்கம் நகர இருப்பதாக கேள்விப்பட்டோம், அதற்கான முயற்சிகளில் இருக்கிறீர்களா..?

சில முயற்சிகள் நடந்துகிட்டு இருக்கு. முழுநேர எழுத்தாளர்களே முட்டி மோதிட்டு இருக்குற சினிமாக்குள்ள, சும்மா பொழுபோக்குக்காக எழுதுற நம்ம கதைகளைப் பத்தி கேக்குறப்போ சந்தோசம் தொத்திக்கும். எல்லா எழுத்தாளர்களுக்கும் உள்ளது மாதிரி, என்னோட கதைமாந்தர்களை பெரிய திரையில் பாக்குற ஆர்வம் எனக்கும் உண்டு. பார்க்கலாம். காலம் என்ன முடிவு பண்ணுதுன்னு"

உங்களது பிள்ளையில் எது சிறந்த பிள்ளை எனக் கேட்பது அபத்தம் என்றாலும் தாங்கள் எழுதியதில் தங்களுக்கு மிகவும் பிடித்த சிறுகதை மற்றும் நாவலைச் சொல்ல முடியுமா?

ஒரு பிள்ளையை சொன்னா பிற பிள்ளைகள் வருத்தப்படும்லா. ஆனா நிறைய வாசகர்கள் எடுத்து கொஞ்சுனதுன்னு சில பிள்ளைகளை அதாவது சில கதைகளைச் சொல்லலாம். சடலசாந்தி, அண்டி , முடியன்னு சில கதைகள்

வாசிப்புத்தான் எழுத்தை மேம்படுத்தும் என்று சொல்கிறார்களே... அது குறித்து தங்கள் கருத்து..?

"கண்டிப்பா உண்மை. வாசிப்பே உளறி ஓடும் மனசுக்கு ஒரு ஒழுங்க காட்டும் ஆசானாக்கும். என்னோட அயற்சியான நேரங்களிலெல்லாம் புத்தகங்கள் மட்டுமே பெரும் துணையாகும்.

இந்த ஆண்டு பாண்டியன் பொற்கிழி விருது வாங்கியது பற்றி..?

"பாண்டியன் பொற்கிழி விருது எனக்கு பெரிய மரியாதை. என்னை சார்ந்தவர்களுக்கும், என் ஊர்காரர்களும் கூட ஒரே சந்தோஷம். நாஞ்சில் நாடன் சொன்னது போல , அங்கீகாரம் மூலம் எழுத்தாளன் உருவாவதில்லை. ஆனால் எழுத்தாளன் திரும்ப எதிர்பார்க்கக்கூடிய ஒன்றே ஒன்று அங்கீகாரம் மட்டுமே. இதை சாத்தியப்படுத்திய கேலக்சி பதிப்பக நண்பர்களுக்கு இறைவன் எல்லா நன்மைகளையும் அருளட்டும்.

தங்கள் குடும்பம் பற்றி..?

என்னோட அப்பா சரவணபெருமாள். அம்மா ருக்குமணி. விவசாயக் குடும்பம். ஷீலா, கோகிலான்னு ரெண்டு தங்கைகள். என்னோட எல்லா கதைகளோட முதல் வாசகி என்னோட மனைவி ராதாதான். எல்லா புகழும் இறைவனுக்கும், அடுத்த படியா அவளுக்குத்தான். ரெண்டு குழந்தைகள் மகள் சாய். மகன் அஸ்வந்த்.

புதிதாக எழுத வருபவர்களுக்கு தாங்கள் எதுவும் சொல்ல விரும்பினால்..?

"எழுதுறதுக்கு முன்னாடி யோசிக்காதீங்க, முதல்ல எழுத ஆரம்பிங்க. பின்னாடி பொழுது போன போக்கில திருத்திக்கலாம். கதை எழுதுவது பயம் இல்லாத செயல். வாசிப்பதைத் தொடங்குங்கள், எழுத பழகுங்கள், உங்க எழுத்து அதற்கான வாசகர்களை அதுவாகவே தேடிக் கொள்ளும். அவ்வளவுதான்.

ஜாடை

-ஷோபனா நாராயணன்

இளங்காலையின் மென்வெளிச்சம் கண்களுக்குள் பரவத்தொடங்கிய போதுதான் படுக்கையின் மென் ஈரம் உறைத்தது. ஓ... இன்றைக்கு படுக்கையை நனைத்திருக்கிறேன். எத்தனை மாதங்களுக்குப் பிறகு இது... யோசனையை ஓட்டியவாறு எழுந்து போர்வை, பெட்ஷீட்டுடன் கழிவறைக்குள் நுழைந்தேன். கண்ணாடியில் தெரிந்த சோபையான முகத்தினை ஒரு நிமிஷம் பார்த்தேன். மறுபடி கவலை பீடிப்பதற்குள் மேடிட்ட வயற்றினை தடவிக்கொண்டு பல்துவக்கத் துவங்கினேன்.

சமீபமாகத்தான் இந்த படுக்கையை நனைக்கும் பழக்கம் வந்திருக்கிறது. ஏதோ கனவுகள் குழப்பங்கள் கலந்த மயக்கநிலை மாதிரி இருக்கும். தவறாமல் அத்தை வருவாள். ஏதாவது கத்துவாள். ஊர் பார்க்க சத்தமாக... ஏதேதோ கலவையான குரல்கள்.. கைகளை காட்டிக் காட்டி ஏதேதோ சொல்கிறார்கள். நான் தலைகுனிந்தபடி உள்ளாடையுடன் நிற்பேன். சட்டென உறக்கம் விழிக்கும் நாளில் படுக்கை நனையும். சில நாட்களில் பாட்டி வருவதாய் இருக்கும். தலையை தடவுவாள். அம்மாதிரி கனவுகளில் இடையில் விழிக்கவேண்டிய சிரமம் எழாது.

காலையில் இப்படி கனவு ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தால் எப்படி. இந்த வாரம் அட்மிட் ஆகவேண்டும். இரண்டு மூன்று நாட்களில் குழந்தையை பார்த்து விடலாம் என்னும் போது பரபரப்பாக மகிழ்வுத்துள்ளலாகத்தானே இருக்க வேண்டும்? ஏன் நான் மட்டும் இப்படி பரிதவிப்பாய் இருக்கிறேன்?

எந்திரத்தனமான யோசனைகளுக்கிடையே டீயுடன் ஆதவ் வந்தமர்ந்தான். எனக்கும் நீட்டினான்.

என்ன மேடமுக்கு காலைலயே யோசனை?

ஆதவ்..ப்ளீஸ் சொல்லுங்க. குழந்தை யார் மாதிரி இருக்கும்?

ஆரம்பிட்சுடியா? சுமி.. இதோட எத்தனாவது தடவை கேக்கற இதை. யார் மாறி இருந்தா என்ன?

கேக்கறேன்ல.சொல்லக்கூடாதா?

மாட்டேன். ரெண்டு நாள் பொறு தெரியும்.

எழுந்து போய்விட்டான். ஒருமுறையாவது என்னை மாதிரித்தான் இருக்கும். உன்னை மாதிரி இருக்காது என்று சொல்லக்கூடாதா இவன். மெல்லிய பெருமூச்சோடு அலுவல்களை கவனிக்க எழுந்தேன்.

கடந்த இரண்டு வருடங்களாகத்தான் இந்தக்கவலை.

முதலில் ஒன்றிரண்டு போட்டோக்களில் தான் என்னை பார்க்க அப்படித் தோன்றியது. ச்சே ச்சே இருக்காது . போட்டோ எடுத்தவன் சரியா எடுக்கல என்றிருந்தது. அதான் கண்ணாடி பார்க்கிறோமே தினமும். அப்படி இருக்காது என்றிருந்தது. கொஞ்சம் முடி முன்மண்டையில் கொட்டியிருக்கு. அதான் காரணம் என்றிருந்தது. அப்புறம் கொஞ்சம் நம்பித்தான் ஆகணும்னும்போது அம்மாவிடம் போன நாளும் கேட்ட கேள்வியும் இப்பவும் ஞாயபகம் இருக்கு.

ம்மா.. நான் அத்தை மாதிரி இருக்கனா பாக்க?

அம்மா இல்லேன்னு சொல்லணும்னு அத்தனை வேண்டுதல் வேறு மனசுக்குள்.

அத்தனையும் போட்டுடைப்பது போல அம்மா உடைத்தாள். ஆமாம். நீ உங்கத்தை மாதிரித்தான் இருப்ப. முன்ன அவ்ளோ தெரில. வயசாக வயசாக அப்படியே சுந்து அத்தை ஜாடை வருது என்றாள்.

அன்றைக்குத்தான் குழந்தைப்பருவத்திற்குப் பிறகு அத்தனை வருடம் கழித்து படுக்கையில் சிறுநீர் கழித்தது..

இப்போது போல் இருக்கிறது. அந்த நாள்..

யோசித்தபடியே நடந்து வந்த அழகில் கண்ணாடி முன் வந்து நின்றிருந்தேன். மறுபடி என் முகம்

அதே நிறம்.. அதே நெற்றி... அதே கண்.. தாடை மட்டும் அம்மா..மூக்கு அப்பா..

ச்சை. இதென்ன உடற்கூராய்வு போல. நான் எவரெவரின் மிச்சம் என முகக்கூறு ஆராய்ச்சி. இது நான்தான். நானேதான். கோடுகளை எல்லாம் அழி. முகத்தில் சில்லென்ற தண்ணீரைக்கொண்டு அடித்துக் கழுவினேன். கொஞ்சம் இதமாக இருந்தது.

அப்படி இப்படி என மனதைச் செலுத்தி அறை நாளினைக் கடந்தாயிற்று. அம்மா இடையில் இரண்டுமுறை வந்து பேச்சுக்கொடுத்தும் எதிலும் மனம் செல்லாமல் தவிப்பாக இருந்தது.

என்னாச்சும்மா. உடம்பு ஏதும் சரியில்லையா சுமி என்றாள் அம்மா. எதாவது அசௌகரியமா இருக்கா சொல்லு. கஷாயம் எதும் வேணுமா? இப்படி என்னென்னவோ..

ஒண்ணும் வேண்டாம்மா என்று சொல்லியும் விடாது சுத்தி வந்து கொண்டிருந்தாள்.

சுமி.. என்னாச்சுடா. எங்கிட்ட சொல்லக்கூடாதா என்றாள் மறுபடியும்.

இல்லம்மா.. என்னவோ யோசனை. குழந்தை யார் ஜாடைல பொறக்கும்மா?

என்னடி இது? உனக்கென்ன கிறுக்கா புடிச்சிருக்கு? எத்தன தடவை எல்லாரையும் இதை கேப்ப? என்ன உனக்கு இதில? நல்லபடியா பிரசவம் ஆகி தாயும் புள்ளையும் பொழைச்சு வரணுமேன்னு நானே கவலைல இருக்கேன். நீ என்னடான்னா...

ப்ச்.. சொல்லுமா.

யார் மாறி இருக்க போகுது? உன்ன மாறியோ மாப்ள மாறியோதான?

அப்ப நான் மட்டும் ஏன்ம்மா அத்தை மாதிரி இருக்கேன்?

அம்ம கொஞ்ச நேரத்திற்கு பேசவில்லை. அமைதியாக இருந்தாள். கைகளை ஆதூரமாகப் பற்றிக் கொண்டாள். சுமி.. நீ இன்னும் அதை மறக்கலையா? இன்னுமா வயத்துப்பிள்ளையோட இதை யோசிச்சிட்டு இருக்க? அதையெல்லாம் தாண்டி வரணும் டா கண்ணு என்றாள்.

ம்மா.. வளரும் போது பெருசா எதும் தெரில்லம்மா. இப்ப தினம் தினம் கண்ணாடி பாக்கற போதும், சும்மா ஒரு செல்பி எடுத்தாலும் எந்த போட்டோ பாத்தாலும் என் ஜாடை அத்தையா இருக்கறத பாக்கறப்ப ரொம்ப தாக்கமா இருக்கும்மா என்றேன்.

உனக்குத் தெரியுமாம்மா, நான் என் கல்யாண ஆல்பத்தைக்கூட பாக்கறதில்ல. ஒளிச்சு வைச்சிருகேன். ஆதவ் எத்தனையோ தடவை கேட்டுட்டார். ஏன் நம்ம போட்டோவ பிரேம் பண்ணி மாட்டக்கூடாதுன்னு. கஷ்டமா இருக்கும்மா என்று தேம்பத்துவங்கினேன்.

சுமி.. என்று அம்மா ஆறுதலாய் முதுகை தடவினாள். விட்டுடணும் சிலத.. என்று நகர்ந்துவிட்டாள்.

இரண்டு நாட்களும் நாளொரு சிந்தனையும் பொழுதொரு கவலையுமாய் அழகாக நகர்த்தி கொண்டிருந்தேன்.

என்ன சதா சிந்தனை.ஒண்ணும் ஆகாது பயப்படாத என்ற ஆதவிடம் நாம ரொம்ப வெறுக்கற ஒரு விஷயத்த தவிர்க்கவே முடியாத விஷயமா காலம் நம்மகிட்ட தரும்போது என்ன பண்ணனும் ஆதவ் என்று தத்துவமாய்க் கேட்டேன்.

அத்தை மாதிரி தெரியக்கூடாது என இதுவரை என்னென்ன நான் செய்தேன் என்று கண்மூடி யோசித்தேன். பொட்டு ஸ்டைலை மாத்துவது, தலையலங்காரத்தை மாற்றுவது, குறிப்பிட்ட கோணல் பாணியில் செல்பி என எனது குரங்குசேஷ்டைகளை எண்ணி புன்னகைக்கக்கூட செய்தேன்.

மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நாள். அட்மிட் ஆக போய்க்கொண்டிருக்கிறேன். கண்களை மூடிக்கொண்டால் அத்தை வருகிறாள். தலையைக் குலுக்கிக் கொண்டேன். பலனில்லை. சடசடவென ப்ரவாகமாய் எண்ணங்கள். எத்தனை விஷயங்களைத் தாண்டியும் ஏன் மனம் அதில் திரும்பத்திரும்ப சுழல்கிறது என கேட்கும் நேரம் அம்மா விஷ்ணு சஹஸ்ரநாமத்தை துவங்கியிருந்தாள். அது என்னை என்னிடமிருந்து பிரித்து அத்தையின் வீட்டிற்குள் தள்ளியது. அங்கு நான் எட்டிப்பார்க்கிறேன். அத்தை அதிதீவிரமாய் ஸ்ரீராம ராமேத்தி என்றிருந்தாள்... மெல்ல நடந்து வீட்டிற்கு வெளியில் வருகின்றேன். அப்போது தற்காலத்திலிந்து விடுவித்துக் கொண்ட எனக்கு ஆறு வயது.. வெள்ளை ப்ராக் சகிதம் தூக்க கலக்கத்தில் ஒரு குட்டி பஞ்சுப்பொதி போல இருக்கின்றேன்.

சர்ர்ர்ர்ர்க்க்க்... மருத்துவமனை வந்தாயிற்றா.. தற்காலத்திற்குள் மீண்டும் பொறுத்திக் கொள்வது எத்தனை பாதுகாப்பாக இருக்கின்றது..

மெல்ல இறங்கு சுமி..பாத்து, பத்திரம் போன்ற வார்த்தைகள் தான் எத்தனை வெதுவெதுபானவை.. பாப்பாவ உள்ள விடுங்க டீச்சர். பாவம் சின்னப்புள்ள என்று அன்றொலித்த குரல்களைப் போலவே..

என்னைச் சுற்றி பம்பரம் போல் ஆதவும், ஏக பிராத்தனைகளுடன் அம்மாவும் சூழ்ந்திருக்க நான் மட்டும் மறுபடி மறுபடி பொள்ளாச்சியின் அந்த குறுகிய கிராமத்தெருவில் குளிர்காலையில் மிதந்தபடி இருந்தேன்.

பாட்டியின் ரசம் நினைவில் வர நாவும் கண்களும் ஒரு சேர சுரந்தது. அன்றும் பாட்டி ரசம் தான் வைத்துக்கொண்டிருந்தாள். வீட்டு வாசாலில் எழுந்த கூச்சலான கலவையான சத்தங்கள் அவளை அவளது கதகதப்பான சமையலறை கித்தான் சாக்கில் இருந்து வெளி வரச் செய்திருந்தது..

பேஷண்ட்ட கூட்டிட்டு வாங்க.. நர்ஸ் வந்து நின்றதும் மெல்ல இடுப்பைப் பிடித்து எழுந்து மெல்ல நினைவுக்கூட்டிலிருந்து விடுவித்துக் கொண்டேன்.

முதல் பிரசவமா..பயம் வேணாம் எல்லாம் நல்லபடியா நடக்கும் என்று சிரித்த அந்த இளம் நர்ஸின் முகத்தைப் பார்த்து ஒரு கணம் இவள் யார் ஜாடையாய் இருப்பாள்? ஒரு வேளை இவளுக்கும் அவள் அத்தை ஜாடையா என்று குழம்பினேன்.

விறுவிருவென குறித்த படி அலுவல்கள் நடைபெற, அறுவை அரங்கில் இருந்தேன். சில்லென்ற அறையில் சுற்றும் முற்றும் மருத்துவர் குழு சூழ, சுமித்ரா ச்சீர் அப்.. சீக்கிரம் பேபியை பார்க்கலாம் என புன்னைகத்தவாறே என்னைப் புரட்டி மரப்பு மருந்தை தண்டுவடத்தில் செலுத்தினர். அது ஏன் மறப்பு மருந்தாக இருக்கவில்லை என்றிருந்தது.

பின்னர் அவர்கள் மருத்துவரானர்கள் அவ்ர்கள் வேலையை துவங்கினார்கள். நான் மெல்ல அரை மயக்கத்தில் பஞ்சுப்பொதியானேன். ஆறுவயது சிறுமியானேன்.

வெள்ளை கவுன்..பனிக்காலை.. தூணருகில் அழுதபடி நிற்கும் பாட்டி. அத்தையின் ஸ்ரீராம ராமேத்தி..

கலையும் அரைத்தூக்கத்தில் வீட்டு வாசலில் இருக்கும் பாத்ரூமிற்குள் நுழைந்து இடுப்பளவுள்ள தண்ணீர் தொட்டியில் முகத்தைப் பார்க்கிறேன். அதிர்ஷ்டவசமாக அது அன்று அத்தையைப்போல ஜாடையில் இல்லை. அருகில் இருக்கும் முற்றத்தொயொத்த பள்ளத்தில் இறங்கி பல் துலக்க வேண்டும். முந்தய நாள் அங்கு கண்ட பூரான் என் தூக்கதின் இடுக்கிலும் வர மெல்ல பயத்தில் முற்றத்தில் இறங்காமல் தொட்டிக்கு அருகில் அமர்ந்து கொட்டவியுடன் சிறுநீர் கழிக்கத்துவங்குகிறேன். திடீரென அத்தையின் குரல். அது ஸ்ரீராம ராமேத்தியல்ல..

அய்யோ அய்யோ அய்யோ..என்னத்த பண்ற.. கழுத. மடியா குளிக்க வெந்நீர போட்டுவச்ச அது இருக்கற அண்டாக்கிட்டயா அசிங்கம் பண்ணுவ? இதைத்தான் சொல்லித்தந்தாள

உங்கம்மா? என தரதரவென இழுத்து வந்து பாத்ரூம் வெளியில் தள்ளினாள். திகைப்பில் நான் அழத்துவங்க, பாதி சிறுநீர் கழித்துவிட்ட ப்ராக்கை கழட்டி எறிந்துவிட்டு உள்ளாடையுடன் தெருவில் தள்ளினாள். நான் கூசிப்போனேன்.. அம்மா அப்பாவின் மீது கோபமும் இய்லாமையில் அழுகையுமாய் நின்றேன். குளிரில் உடல் கிடுகிடுக்க... அழுகையும் அவமானமுமாய் நின்றேன். என் முன் நின்று கத்தத்துவங்கினாள்.

இனி எப்ப நான் மடியா வெந்நீர் போட்டு குளிச்சு பூஜை முடிச்சு சாப்ட்டு ஸ்கூல் போக முடியும்? உனக்கு அறிவில்ல? இதல்லாம் சொல்லித்தராம என்னத்த பண்றா உங்கம்மா? நல்லா வளர்த்திருக்கா பொண்ணை என்று பிசாசு போல மாறியிருந்தாள் அத்தை.

அந்த ஊரும் என்னைப் போலச் சின்னது. சின்னச் சின்னத் தெருக்கள் சின்னச் சின்ன வீடுகள், சின்னசின்னதாய் கடைகள்.. வாசல் வந்தால் கம்பீரமாய் நிற்கும் மலை மட்டும் பெரிது..அந்த ஊர் மக்கள் மனது போல.. ஒரு குரலுக்கு ஓடி வந்துவிடும் கிராமம்.

ஏங்க டீச்சர் என்னதிது பாப்பா என்ன பண்ணிடுச்சுன்னு இப்படி திட்றிங்க? பாப்பாவ உள்ள விடுங்க டீச்சர், பாவம் சின்னப்புள்ள, விடுங்க டீச்சரே, அம்மா அந்த புள்ளைய உள்ளவுடு நீ மொதல்ல, அதுக்கொரு துணியக்குடுங்க டீச்சர் தப்புங்க டீச்சர் இது, என்று சகல திசைக் குரல்களையும் முகம் பார்க்க திராணியற்று பாட்டி வருவாளா என வீட்டுவாற்படியை பார்த்து தேம்பிக்கொண்டிருந்தேன். சததம் கேட்டு ஓடி வந்த பாட்டி அத்தையின் கத்தலை பார்த்து மிரண்டு போனாள்.

விடு சுந்தரா.. பாவம் அவ தெரியாம பண்ணிட்டா, நான் வெந்நீர் போடறேன் மணியாறந்துங்கறேல்ல நீ போ என விதமாய் மன்றாடினாள். அத்தையின் ஸ்ரீராம ராமேத்தி எங்கோ ஒளிந்து கொண்டது. காளியாகியிருந்தாள். போம்மா நீ என்று கத்தினாள்.

நான் அழுகிறேன் அழுகிறேன் அழுந்து கொண்டே இருக்கிறேன். ஊர்திரும்பும் வரை.. அப்பாவின் விரல்களை பற்றியவாறு நடக்கும் போது ஊர்க்கண்கள் மொத்தமும் மேலே ஊறுவது போல இருந்தது.. அந்த பூரானைப்போல...

இனிய என்ன ஆனாலும் இந்த அத்தையின் முகத்தில் விழிக்கவே கூடாது என சபதம் கட்டிக்கொள்கிறேன்...

யாரோ சட்டென கன்னத்தை தட்டுகிறார்கள்.. மெல்ல அந்த கிராமத்தை விட்டு அதன் குறுகிய தெருவினை விட்டு, மெல்ல அப்பாவின் கையை விட்டு கண்ணைத்திறக்கிறேன்..

சுமித்ரா சுமித்ரா..இங்க பாருங்க.. இட்ஸ் அ கேர்ள் என்கிறார்கள்.

நான் கம்மிய குரலில் கேட்கிறென்.

டாக்டர்.. குழந்தை அத்தை ஜாடையில் இல்லை தான?

பூதத்தின் அடிமைகள்

அ.ஈடித் ரேனா
புதுக்கோட்டை

கேட்டதெல்லாம்
தரும் பூதம்
வெகு சிலரிடம்
மட்டுமே இருந்தது.

தனக்கும் அந்த
பூதம் வேண்டுமென ஆசைப்படாதவர்
யாருமில்லை.

சொந்தமாக பூதம் வாங்க போராடியவர்கள் ஒரு புறம்.
அடுத்தவர் பூதத்தை அபகரிக்க திட்டமிட்டவர்களும் ஏராளம்.

பூதம் கிடைத்ததும்
ஆட்டமாய் ஆடினர்
ஆரம்பத்தில் விதவிதமாய்
வரம் கேட்டு மகிழ்ந்தனர்.

இன்னும் பூதம்
கிடைக்கப் பெறாதவர்களின்
பெருமூச்சு பொறாமையெனக் கொள்ளப்பட்டது.

கேட்ட வரம்
எல்லாம் தந்தாலும்
பூதத்தால் தர முடியாத
வரங்களும் இருக்கின்றன

என்பதை உணர்வதற்குள்
பூதம் அதன் எஜமானர்களை அடிமையாக்கி விட்டது.

வெகு சிலருக்கு மட்டுமே
சரியான நேரத்தில் ஜீபூம்பா சொல்லி வரவைத்து

வேலை முடிந்ததும் மீண்டும்
குடுவைக்குள் அடைக்கும்
வித்தை தெரிந்திருக்கிறது.

அந்த பூதத்தின் பெயர்
பணம்

பாட்டியும் மஞ்சள் கொன்றையும்

கோடை வந்தால்
கொன்றை மரத்தின்
பொன் மஞ்சள் மலர்கள்
வாசல் எங்கும்
இறைந்து கிடக்கும்

காலில் மிதிபடக்கூடாதாம்
வாகன சக்கரத்தில்
நசுங்கி விடக்கூடாதாம்

மலர்களுக்கு வலிக்காமல்
மெதுவாகக் கூட்டி
ஓரம் ஒதுக்கி வைக்கும்

பாட்டியின் உடலெங்கும்
தாத்தாவிடம்
அடி வாங்கிய தழும்புகள்

தாவணி கோவிலில் காவடி சிந்துகள்

ஆர்.வி.சரவணன்.
குடந்தை, (இ) சென்னை

'மலரே மலரே உல்லாசம்...
உந்தன் நினைவோ நினைவோ சங்கீதம்...
உன்னை தான் சந்தித்தால்
உள்ளம் ஓர் வெள்ளைத்தாள்...
இதயம் எழுதும் கவிதை நீ...........'



சில பாடல்கள் கேட்க நல்லாருக்கும். சில பாடல்கள் காட்சியாகப் பார்க்க நல்லாருக்கும். ஆனா கேட்கவும் பார்க்கவும் நல்லாயிருக்கிற பாடல்களில் ஒன்று 'உன் கண்ணில் நீர் வழிந்தால்' படத்தில் வரும் இந்த மான்டேஜ் சாங்.

கவிஞர் மு.மேத்தாவின் வரிகளை, இளையராஜா தன் இசையால் அழகுபடுத்த, ஜானகி தன் குரலால் பாடலை வசப்படுத்த, நான் மட்டும் விட்டு விடுவேனா என்றபடி இயக்குநர் பாலுமகேந்திரா ரஜினி மற்றும் மாதவியை கொண்டு தன் கேமரா கண்களால் கோர்த்திருக்கும் காதல் கவிதை இது.

பாடலில் வரும் சில வரிகளுக்கு நியாயம் செய்ய வேண்டி அவற்றை காட்சிபடுத்தியிருப்பார் இயக்குநர். உதாரணத்திற்கு, முதல் சரணத்தில் தொடங்கும் 'தாவணி கோவிலில் காவடி சிந்துகள். யாரிசை சேர்த்ததோ. யார் மனம் வேர்த்ததோ .....' வரிகளுக்கு ஏற்றார் போல் மாதவி பாவாடை தாவணியில் துளிசி செடியை சுற்றி வருவார்.

'வீடெங்கும் காதலன் வாசனை வீசுதோ ....' வரிகளுக்கு மாதவி ரஜினியின் மடியில் படுத்தபடி அவரை ரசித்து கொண்டிருப்பார். 'தூங்கினால் காதிலே ஞாபகம் பேசுதோ......' வரிகளுக்கு மாதவி ரஜினியின் காதை நிமிண்டுவார். 'வானிலே வெண்ணிலா யாரை தான் தேடுதோ. மோக நோய் தீரவே நீரில் தான் மூழ்குதோ.......' வரிகளுக்கு நிலா ஆக்ரமித்திருக்கும் நீர்நிலையை காட்சிப்படுத்தியிருப்பார்.

பாடல் முழுக்கவே ரஜினி, மாதவி இருவரும் உண்மையான காதலர்களின் உணர்வுகளை அவ்வளவு அழகாக வெளிப்படுத்தி இருப்பார்கள். அவற்றில் நான் ரசித்த தருணங்களை இங்கே குறிப்பிடுகிறேன்.

0.22 நொடியிலிருந்து 0.24 நொடிக்குள் வரும் ரஜினியின் அந்த குறும்புச் சிரிப்பு.

1.33 நொடியிலிருந்து 1.39 செகண்டிற்குள் தலைகோதியபடியும் தலையை சிலிர்த்தபடியும் படகில் உலா வரும் ரஜினி மாதவியின் அந்த உற்சாகம்.

1.51 நொடியிலிருந்து வரும் காட்சியில் ரஜினி பேசி கொண்டிருக்க, மாதவி அவரது நெஞ்சில் சாய்ந்த படிரசித்து சிரிப்பது.

2.20 நொடியில், மீன் எப்போது தூண்டிலில் சிக்கும் என்று காத்திருந்து, சிக்கியவுடன் மௌனம் கலைத்து வெளிப்படுத்தும் உற்சாக துள்ளல்.

2.57 முதல் 3.01 நொடிக்குள் வரும் ரஜினி, மாதவியின் சிரிப்பு.

இப்படி இந்த பாடல் காட்சியில் இயக்குநர் பாலுமகேந்திரா அதகளப்படுத்தியிருக்கிறார்.
பாடல் முழுக்க ரஜினியும் மாதவியும் பேசிக் கொண்டே ஊட்டியை நடந்தே சுற்றி வருகிறார்கள். ரொம்ப நடந்துகிட்டே இருக்காங்களே என்று சில இடங்களில் இயக்குநர் அவர்களை அமர வைக்கிறார். நிற்கவும் வைக்கிறார். ஆக மொத்தத்துல நம்மை ரசிக்க வச்சிடறார். (ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் சில காட்சிகள் மீண்டும் வருகிறது)

1985 ஆம் ஆண்டு வெளி வந்த இந்தப் படத்தை கும்பகோணம் மீனாட்சி திரையரங்கில் பார்த்தேன். இந்தப் பாடல் மட்டும் இத்தனை வருடங்களாக என்னோடு ஒட்டி கொண்டு வந்து கொண்டிருக்கிறது. இத்தனை வருடங்களில் எத்தனை முறை கேட்டிருக்கிறேன் பார்த்திருக்கிறேன் என்பது கணக்கிலடங்கா.

இந்த பாடல் தந்த ஈர்ப்பினால் எனது முதல் நாவலுக்கு நான் வைத்த பெயர் இளமை எழுதும் கவிதை நீ....(இதயத்தை இளமையாக்கி கொண்டேன்).

இந்த பாட்டைக் கேட்கிறப்ப கண்மூடி கற்பனை பண்ணி பாருங்களேன். இரவு மழை நேரத்தில் காதலியோடு கை கோர்த்து குடை பிடித்து நடக்கிற மாதிரி. வார்த்தைகளில் கொண்டு வர இயலாத உணர்வு அது. அது இளையராஜா தந்த இசைக் கொடை.

பாடலில் ஒரு வரி இப்படியாக வரும் ' நீ பாடும் ராகம். உன் வாழ்வின் யோகம்......' என்று. இளையராஜாவை தான் மு.மேத்தா இப்படி சொல்லியிருப்பதாக எடுத்து கொள்ள தோன்றுகிறது.

சென் பாலன்
ஓமான்

அரேபியாவின் ஆபரணம்

ஊரின் பெயரைச் சொல்லாமல் அந்த ஊரில் நம்மை இறக்கிவிட்டால் கேரளத்து மூணாறு என்று தான் நினைப்போம். எந்தப்பக்கம் திரும்பினாலும் பசுமை, சலசலத்து ஓடும் நீரோடைகள், பஞ்சு போல உரசிச் செல்லும் மேகக்கூட்டங்கள், பாறை விளிம்பில் இருந்து வழியும் அருவிகள் என மலையாள தேசத்தின் மலை வாழ் நகரைப் போல இருக்கும் அந்த ஊர். ஆனால் அந்த ஊர் இருப்பது அரேபிய பாலைவனத் தீபகற்பத்தின் ஓமான் தேசத்தில் என்பது தான் நம்ப முடியாத செய்தி. அரேபியாவின் ஆபரணம் என் அழைக்கப்படும் அந்த ஊரின் பெயர் சலாலா.

மஸ்கட்டில் இருந்து சுமார் ஆயிரம் கி.மீ தூரத்திலும், நான் இருக்கும் நிஸ்வாவில் இருந்து சுமார் 850 கி.மீ தூரத்திலும் ஓமானின் தென்மேற்கு கடற்கரை பகுதியில் இருக்கும் ஊர் சலாலா. மற்ற நேரங்களில் வறண்டு இருக்கும் அந்த ஊர் கரீஃப் காலம் (khareef) என்றழைக்கப்படும் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் மட்டும் பசுமை போர்த்திக் கொள்ளும்.

இந்த சலாலா கரீஃப் காலத்தை நமது ஊரின் தென்மேற்கு பருவ காற்றோடு ஒப்பிடலாம். இரண்டின் இயங்கியலும் கிட்டத்தட்ட ஒன்று தான். வெப்ப மாதங்களில் அரபிக் கடலில் இருந்து ஆவியான மேகங்கள், தென் மேற்கு திசையில் இருந்து வடகிழக்கு நோக்கி நகர்ந்து மேற்கு தொடர்ச்சி மலையில் மோதி கன்னியாகுமரி முதல் மும்பை வரையிலும் தென் மேற்கு பருவ மழையை கொண்டு வரும். சலாலாவிலும் அதே போன்று தான். அரபிக் கடலில் இருந்து வரும் மேகக் கூட்டம் அப்படியே நகர்ந்து நிலப்பரப்பிற்குள் நுழையும். சலாலா நகரைச் சுற்றி “U” வடிவில் அமைந்துள்ள மலைகள் உள்நுழையும் மேகக்கூட்டத்தை தடுத்து மழையாக மாற்றுகின்றன.

உலகின் மற்ற எந்த மலை வாழ் இடங்களிலும் இல்லாத ஒரு மேஜிக், ஒரு மாயத்தன்மையை கொண்டது சலாலா. அந்த மாயத்தன்மையை காரில் சென்றால் மட்டுமே உணர முடியும். விமானத்தில் சென்றால் தவற விட்டுவிடுவோம். மஸ்கட்டில் இருந்து சலாலாவிற்கு ஆயிரம் கிலோமீட்டர் கடும் பாலைவனப் பயணம். எனக்கு இரவின் “லாங் டிரைவ்” மிகவும் பிடிக்கும் என்பதால் எங்கள் சலாலா பயணம் பெரும்பாலும் மாலை ஆறு மணிக்குத் தொடங்கும்.

ஆறு மணிக்கு பயணத்தை துவக்கினால், எரிபொருள் நிரப்பி, கொறிக்கும் தீனிகளுடன், ஓமானின் பறக்கும் சாலைகளின் வழியே 400 கிமீ தூரத்தில் உள்ள ஹைமா எனும் இடத்தை இரவு பத்து அல்லது பத்தரை மணிக்கு அடைந்து விடலாம். மணல் பறக்கும் ஹைமா பாலை நிலத்தில் இரவு உணவை முடிக்கும் போது, காரின் எஞ்சினில் இருந்து அடிக்கும் வெப்பம் பாலைவன சூட்டை மீறி நம்மைத் தாக்கும். காருக்கும் நமக்கும் ஓய்வு கொடுத்துவிட்டு 40% தூரத்தை அதற்குள் கடந்து விட்டோமே என நம்மை நாமே பாராட்டிக் கொள்ளலாம். ஆனால் அதற்கு அடுத்து தான் பாலையின் உண்மை முகமே.

ஆங்கில கவ் பாய் படங்களில் காட்டுவார்களே மணலில் பாதி புதையுண்ட மாட்டின் எலும்புக் கூடு, அதைப் போன்றதொரு பாலைவனம். கண்ணுக் கெட்டும் தூரம் வரை பொட்டல்வெளி. திடீரென சாலையின் ஓரங்களில் குவியும் மணல் காரின் சக்கரங்களை வாரிவிடும். இதனால் பயண வேகமும் குறைந்துவிடும். 200 கிலோமீட்டருக்கு ஒருமுறை தான் பெட்ரோல் ஸ்டேசன். அங்கு தான் தண்ணீர், தேநீர் கிடைக்கும். மற்ற இடங்களில் ஆள் அரவமே இருக்காது. கார் கண்ணாடியை இறக்கினால் புழுதியும் வெப்பமும் கன்னத்தை புண்ணாக்கும். உடும்பு, முயல், நரி போன்ற பல விலங்குகளின் மின்னும் கண்களை சாலை ஓரங்களில் பார்க்கலாம். அப்படியான இருட்டுச் சாலையில் கிட்டத்தட்ட 200 கிலோமீட்டர் பயணித்து ஒரு பெட்ரோல் ஸ்டேசன் வெளிச்சத்தை பார்க்கும் போது மீண்டும் காரை நிறுத்தி ஒரு மணி நேரம் ஓய்வு எடுக்கத் தோன்றும்.

எந்த மாதிரியான திறமையான ஓட்டுநருக்கும் கடுமையான காலம் என்றால் அது அதிகாலை மூன்று மணி. அதுவும் 600 கிமீ ஏற்கனவே வாகனம் ஓட்டிய பிறகு சற்றே அசந்தாலும் காரையே கவிழ்த்து விடும் பாலை மணலில் அதிகாலை மூன்று மணிக்கு வாகனம் ஓட்டுவது பெரும் சவால். அதைக் கடந்து பயணம் செய்தால் சலாலாவின் அடிவாரமான தும்ரைட் நகரை நான்கு மணிக்கெல்லாம் அடைந்துவிடலாம்.

இப்போது தான் பொறுமை முக்கியம். இன்னும் அரை மணி நேரத்தில் சலாலா என அவரசமாக மலை ஏறி விடக் கூடாது. தும்ரைட் நகரின் நெடுஞ்சாலைகளில் தேநீர்க்கடைகளும், அவற்றின் எதிரே ஓய்வு எடுக்க நாற்காலிகளும் இருக்கும். குழந்தைகள் விளையாட ஊஞ்சல் கொண்ட பூங்காக்களும் இருக்கும். அங்கு விடியும் வரை பொறுமையாக காத்திருக்க வேண்டும். ஐந்தரை மணிக்கு மேல் அங்கிருந்து கிளம்பினால் மலையேற்றம். அரை மணி நேரம் மெதுவாக மலை ஏறும் போது உதயசூரியன் கிழக்கில் இருந்து எழும்பி ஊரையே வெளிச்சக் காடாக மாற்றும். நீண்ட பொட்டல் வெளி கண்ணுக்குத் தெரியும்.

அப்போது தான் அந்த மேஜிக் நிகழும். கடும் பாலை நிலத்தில் எங்கிருந்தோ வந்த மேகங்கள் திடீரென சூழும். நாற்பது டிகிரிக்கு மேல் கொதித்த வெப்பநிலை 20 ஆகும். காரின் கண்ணாடியில் பனி படரும். கையை வெளியில் நீட்டினால் ஈரமாகும். இதுவரை இருந்த பாலை எங்கே சென்றது எனத்தோன்றும். இந்த மாற்றத்தை வார்த்தைகளில் சொல்ல முடியாது, அனுபவித்தால் தான் இதன் மகத்துவம் புரியும்.

ஐந்து நிமிடங்களுக்கு முன் வரை ஊனை உருக்கும் பாலை. ஐந்து நிமிடங்களில் உள்ளம் குளிரும் குளுமை. உணவு எப்போதும் இன்பமானது. ஆனால் நீண்ட பசிக்குப் பிறகு கிடைக்கும் உணவின் சுவை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும். அதைப் போன்றதொரு மேஜிக் தான் சலாலா. உலகின் எந்த இடத்திலும் இது போன்றதொரு பாலையில் இருந்து குறிஞ்சியில் நுழையும் மாற்றத்தை அனுபவிக்க வாய்ப்பே கிடையாது. சலாலாவிலும் இந்த கரீஃப் மாதங்கள் தவிர மற்ற நேரங்களிலும் இந்த வாய்ப்பு கிடைக்காது. தவறவே விடக்கூடாத மேஜிக் இந்த கரீஃப்

சலாலாவை அடைந்த பின் எங்கு சுற்றிப் பார்க்கலாம்? சில ஊரில் மலை மீது கோவில் இருக்கும், சில ஊரில் மலையே கோவில் என்பது போல, சலாலாவில் நீங்கள் எங்கு வேண்டுமானாலும் அமரலாம், அந்த இடம் ஒரு “ஸ்பாட்”. எனினும் வாதி தர்பாத், அரேபியாவில் சலாலாவில் மட்டும் காணக் கிடைக்கும் ஆப்ரிக்க நாட்டின் போபோ மரங்கள், மொக்சைல் கடற்கரை, கேரள சேரமான் மன்னரின் கல்லறை, சாம்பிராணி மரங்கள் என நிறைய முக்கிய இடங்கள் உள்ளன. ஒரு மாதம் தங்கினாலும் சுற்றிப் பார்க்க இடங்கள் உள்ளன. அங்கு கிடைக்கும் உணவு வகைகளும் நாக்கை அடிமையாக்கும்.

யூடியூபில் சலாலா பற்றி தேடினால் நிறைய காணொளிகள் கொட்டிக் கிடக்கும். நீங்கள் பயண விரும்பியாக இருந்து உங்களுக்கு இப்போது பயணம் செய்ய உகந்த சூழல் இல்லை எனில் அந்த காணொளிகளை தயவு செய்து பார்க்க வேண்டாம். பிறகு ஆனது ஆகட்டும் என அனைத்தையும் தூக்கிப் போட்டுவிட்டு சலாலா கிளம்பிவிடுவீர்கள். இன்னொரு விசயம், அப்படி சலாலா கிளம்பினால் விமானத்தில் சென்று இறங்காமல் மஸ்கட்டில் இருந்து காரில் சென்று பாருங்கள். அப்பொழுது தான் அந்த மேஜிக்கை முழுமையாக உணர முடியும்.

ஸூஃபியின் முத்தம்

அம்முராகவ்
தேனி

நான் ஒரு பயணத்தில்
முத்தமொன்று பெற்றேன்
முன்னும் பின்னும் உதாரணமில்லாதது
முத்தத்தை ஒன்றோ இரண்டோ
பிரதிகள் எடுத்திருக்கலாமாக இருந்தது.

பிரதி எடுக்கப்பட இயலாத
முத்தம்
வெளியில் கலந்து கரைகிறது.

இன்னொரு பயணமும் அப்படி வராது
இறுக்கமான மார்புக் கச்சத்தைப் போல
நினைவுகள் பற்றிக் கிடக்கிறது.

ஒரு மீன்
இன்னொரு மீனை விழுங்குவது போல
உன் முத்தத்தை விழுங்கி இருக்கலாம்.

என்முத்தம்
தவறி விழுந்து பூக்கூடையிலிருந்து
ஒரு பூ
அவளின் புதிய மூக்குத்தியாகியிருக்கிறது

நாபிக்கமலத்தின் கீழே
வலுக்கட்டாயமாக
பெற்றுக் கொண்ட முத்தம்
இப்போதும் தழும்பாகக் கிடக்கிறது
உஷ்னமேறிய ஒரு கோப்பையின்
பாணத்தை உறிஞ்சுபவன் போல
முத்தத்தை உறிஞ்சினேன்
தேனில் விழுந்த
இறகின் முனையிலிருந்து உருளும்
அபூர்வத்துளியானது அவளின் முத்தம்

கைய்யாமின் பழைய கோப்பை ஒன்றில்
அவளோடு கூடிய ஓட்கா இரவொன்றில்
அறையெங்கும்
இறகின் முனையிலிருந்து
விழுந்த துளிகள் பெரும் சுனையானது

முத்தங்கள் மூழ்கிக் களித்த பொழுதொன்றில்
அறை கடலானது

செங்குத்தான பாறையில்
நாணயம் போல உருளுகிறது
உன் முத்தத்தின் நினைவு

தனித்தனியாகக் கிடக்கும் முத்தங்களைக்
கூட்டிப் பொதிந்து சமணக்குகையில்
வைக்க எத்தனிக்கையில்
பாறையில் உருண்டு நழுவிய
முத்தப் பொதியை அடிவாரக்
குளத்தின் மீன் விழுங்கியது
நினைவுகள் வரும் போதெல்லாம்
அந்தக் குளம் நழுவி
என் கண்களில் விழுகிறது.

யார் நீ?

பகுதி - 1

அந்த மாலை

ஸ்ரீராம்
சென்னை

"உங்க ரசனையைதான் பார்க்கறேனே... எனக்கு நீங்க பொண்ணு பார்க்க வேணாம்... பழம் பழமா பார்ப்பீங்க.. நானே பார்த்துக்கறேன்... இப்போ எனக்கு கல்யாணம் வேண்டாம்..."

வினோத் சத்தமாக பேசினான்.

"இப்படியே சொல்லு... நாலு வருஷமா கேட்டுக்கிட்டிருக்கோம்... பொண்ணு கிடைக்கறது அவ்வளவு சுலபம்னு நினைச்சியா? இப்படியே போனா கல்யாணமே ஆகாதுடா..." மூர்த்தியும் எரிச்சலுடன் கொஞ்சம் சத்தமாகவே பேசினார். அது அவர் இயல்புக்கு மாறானது.

"அப்படியே இருந்துட்டுப் போறேன் போ..."

ஸ்வாமி முன் அமர்ந்து ஸ்லோகம் சொல்லிக்கொண்டிருந்த ரேணு மகனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, அப்படியே கணவரை ஒரு பார்வை பார்த்துவிட்டு ஸ்லோகத்தில் கவனமானாள்.

"எப்படியோ உன் அக்கா இந்துவுக்குக் கல்யாணம் பண்ணி வச்சிட்டோம்... உங்க ரெண்டு பேரோட பெரிய பாடா இருக்கு... ச்சே...."

மூர்த்தி வெளியேறினார். வாரத்தில் மூன்று நாட்கள் அவர் அந்தத் தெரு முனையில் இருக்கும் உணவகத்துக்குச் செல்வார். அங்கு கிடைக்கும் பொங்கலும், இட்லி சாம்பாரும் அவருக்கு அவர் பழைய நாட்களை நினைவு படுத்துகிறதாம். அங்கே ஆற அமர அமர்ந்து சாப்பிட்டு விட்டு மெதுவாகத்தான் வருவார். ஓய்வுபெற்று ஒரு வருடம் ஆன நிலையில் இது சமீப காலங்களின் வழக்கம் ஆகிப் போயிருந்தது.

அதுவும் இது மாதிரிப் பேச்சுகள் சமீப காலமாய் வீட்டில் அதிகமாகி இருந்தன. 'அவர்கள் வேண்டாம் என்றுதான் சொல்வார்கள். நீங்கள்தான் பார்க்கவேண்டும், முடிக்க வேண்டும்' என்று நண்பர்களும் உறவினர்களும் சொல்லிக் கொண்டிருக்க, அவர்களுக்கு தன் வீட்டின் நிலை தெரியவில்லையே என்று நினைத்துக் கொள்ளுவார் மூர்த்தி. பிடிவாதக்கார மகன். 'உனக்கு முடிச்சுட்டுதான் சின்னவனுக்குப் பார்க்கவேண்டும்' என்று சொன்னால் கூட, 'ஓ.. அப்படி எமோஷனல் பிளாக்மெயில் செய்கிறீர்களா?' என்பவனை என்ன சொல்வது?

இந்துவிடம் சொல்லிப் பேசிப்பார்க்கச் சொன்னார். அவளும் முயன்று பார்த்து "அப்பா... பேச்சை எடுத்தாலே கத்தறான்.." என்று விட்டாள்.

ஹோட்டல் வந்து விட்டது. உள்ளே நுழையும்போதே கல்லாவில் இருப்பவர் புன்னகைத்து, தலையசைத்து வரவேற்பை வெளிப்படுத்தினார். உள்ளே பார்த்தார்.

ஏ ஸி அறையினுள் நுழைந்து இருப்பதிலேயே கடைசி இருக்கையில் அமர்ந்து கொண்டார். அப்படி அமர்ந்தால் பரிமாறுபவர் மெதுவாகத்தான் அவர் இருப்பிடம் வருவார். அது அவர்களுக்குள் உடன்பாடு. மெதுவாய் யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பார். வருபவர்கள் போகிறவர்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பார். சமயங்களில் கையில் டைரியோடு வருவார். எதையாவது எழுதிக் கொண்டிருப்பார்.

உடனே செல்ல வேண்டும் என்றால் முன்னாலேயே அமர்ந்து சாப்பிட்டுவிட்டுக் கிளம்புவார். ஆனால் அங்கு எந்த வேளைகளிலும் நெருக்கும் கூட்டம் எப்போதுமே இருக்காது.

இவர் அமர்ந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் உள்ளே நுழைந்த ஒரு இளம்பெண் அங்குமிங்கும் பார்த்துவிட்டு, போன் பேசியபடியே இவர் இருக்கைக்கு வந்தாள். சின்ன குரலில் பேசியபடியே எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தாள். அழகாக இருந்தாள்.

அவள் வந்ததால் அருகே வந்தார் சர்வர். வந்தவள் ஃபோனை அமர்த்திவிட்டு "ஸ்டார்ட்டர் என்ன இருக்கு?" என்று கேட்க, அவளிடம் மெனு கார்டை கொடுத்துவிட்டு இவரைப் பார்த்தார் சர்வர்.

"சாம்பார் இட்லியா? கொண்டுவந்து விடவா?"

தலையாட்டினார் மூர்த்தி. சர்வர் அகன்றார்.

நேரம் ஊர்ந்தது.

அவள் ஓரிருமுறை இவரைப் பார்ப்பதும், ஏதோ யோசிப்பதுமாக இருந்தாள். ஏதோ ஒரு தவிப்பு அலலது ஆயத்தம் தெரிந்தது அவளிடம். வேறு இருக்கைக்கு மாறலாமா என்று யோசித்தார் மூர்த்தி. நல்ல யோசனை என்று தோன்றவே எழ ஆயத்தமானார்.

இவரைப்பார்த்து புன்னகைத்தாள் அந்தப்பெண். "குட் ஈவினிங் அங்கிள்... ரொம்பக் கவலையாய் இருக்கீங்க போல.."

'அதைப்பற்றி உனக்கென்ன' என்பது போல ஆச்சர்யத்துடன் அவளை நிமிர்ந்து பார்த்தவர் நெற்றியைச் சுருக்கினார். "என்னையா கேட்கிறாய்?" என்றது நெற்றிச் சுருக்கம்.

"என் பெயர் வினோதினி அங்கிள்... இன்ஃபோசிஸ்ல வேலை பார்க்கறேன். இப்போதைக்கு 70,000 தர்றாங்க..."

"இதை எல்லாம் ஏன் என் கிட்ட சொல்றீங்க?"

"நீன்னே சொல்லலாம் அங்கிள்... சின்னப் பொண்ணுதான் நான்.."

அதற்குள் சர்வர் அவளுக்கு அவள் கேட்ட மஷ்ரூம் சூப் கொண்டுவந்து கொடுக்க, அவளை அதை எடுத்து ஸ்பூனால் அளைந்தாள். எதிரில் இருந்த சிறு டப்பாவிலிருந்து பெப்பர் எடுத்து சூப்பில் தெளித்துக்கொண்டாள்.

'பெயர் விநோதினியா? என் பையன் பெயர் வினோத்... என்ன பொருத்தம்! இப்படிப் பேர் இருந்தாலே அனா பினாவா இருப்பாங்க போல'

"ஸாரி அங்கிள்... அதிகப்ரசங்கி போல பேசறேனா? உங்க ஏகாந்தத்தைக் கெடுக்கறேனா?" புன்னகையுடன் கேட்டாள் அந்தப் பெண்.

ஒன்றும் பேசாமல் அவளை பார்த்துவிட்டு சர்வர் வருகிறாரா என்று பார்த்தார் மூர்த்தி. 'ஏதாவது ஏமாத்துப் பொண்ணோ? பணம் கிணம் பறிப்பாளோ... ஏதாவது ஏடாகூடம் ஆகிடுமோ...'

இட்லி சொல்லாமல் கிளம்பி இருக்கலாம் என்று தோன்றியது மூர்த்திக்கு. இப்போதான் என்ன போச்சு? கிளம்பி சர்வரிடம் போய் வேண்டாம்னு சொல்லிட்டு நடந்துடலாம். மறுபடியும் எழ நினைத்தார்.

அதற்குள் சிறு இட்லிகளை சாம்பாரில் குளிப்பாட்டிக் கொண்டுவந்து வைத்து விட்டு, 'வடை வேணுமா?' என்று கேட்டு விட்டு ஒரு அதிருப்தியான மறுப்பை பதிலாய்ப் பெற்றுக்கொண்டு நகர்ந்தார் சர்வர்.

ஸ்பூனால் இட்லிகளை யோசனையுடன் மெதுவாய்ச் சிதைத்து சாம்பாரில் ஊறவிட்டார் மூர்த்தி. ஒரு ஸ்பூன் எடுத்து வாயில் போட்டுக்கொண்டார்.

தொடர்ந்து தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் அந்தப் பெண்ணின் பார்வை சங்கடப்படுத்தியது. சாம்பாரில் ஊறிய இட்லியின் ருசி கூட மனதில் பதியவில்லை.

"வினோத் ரொம்பப் படுத்தறானா அங்கிள்?

சட்டென நிமிர்ந்தார் மூர்த்தி. "யார் நீ?"

(தொடரும்)

குருட்டுக் கோழிகள்

புனிதா பார்த்திபன்

வழியறியாது கால் போன போக்கில் சென்று எங்கோ ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தான் அரவிந்த். பிடிக்காமல் படித்த படிப்பு, அதன் வழியே கிடைத்த பணியில் மட்டும் எப்படி பிடித்தம் தரும்?
மூன்று முறைகள் செயல்திறனில் குறைபாடு உள்ளது என எச்சரிக்கை செய்யப்பட்டிருந்த நிலையில் இன்று வேலையை விட்டே நீக்கியிருந்தனர். அவனும் அப்பணியைத் தக்க வைத்துக் கொள்ள எவ்வளவோ முயற்சி செய்தான், தூங்காமல் கற்றுப் பார்த்தான். என்ன முயன்றும் இந்த ஐடி நிறுவனங்களின தொழில்முறை அவன் மூளையில் ஏறவேயில்லை. நடப்படும் எல்லா மரங்களும் ஒரே பலனைத் தந்திடுமா? அவன் முடங்கிப் போனான்.
'பத்து லட்சம் செலவு பண்ணி படிக்க வச்சதுக்கு, எங்கள நடுத்தெருவுல நிறுத்திட்ட' எனக் கசப்பை உமிழ்ந்தார் அப்பா.
'எனக்கு வரலப்பா' என எத்தனை முறைகள் மனதுக்குள் கத்தித் துடித்திருப்பான்.
இங்கு, குழந்தைப் பருவம் கடந்ததுமே, மரமோ, மனிதனோ கல்லடி பட வேண்டும். அதுவும் ஒவ்வொரு அடிக்கும் ஒரு பழம் நிச்சயம் விழ வேண்டும். உடைந்து போய் ஒய்ந்து அமர்ந்தவனைச் சுற்றி ஏதேதோ எதிர்மறை எண்ணங்கள் எட்டி உதைத்தன.
காலடிச் சத்தமொன்று அருகில் கேட்டதில், நிமிர்ந்து பார்த்தான். ஒருவர் கை நிறைய அரிசியை மரத்தடியில் கொட்டிச் சென்றார். பாய்ந்து வந்த கோழிக் கூட்டம் கொத்த ஆரம்பித்தது. முதலில் வந்தவையும், முண்டித் தள்ளியவையும் வாய் நிறைய அள்ளின. கொஞ்சம் பலமற்றவைக்கு இடம் கிடைக்கவில்லை. அவன் தன்னை அவற்றோடு ஒப்பிட்டுக் கொண்டான்.
கோழிகள் முண்டிக் கொண்டு உண்டதில், இரை நாலா பக்கமும் சிதறியது. அவ்வழியே கடந்து சென்ற பெரியவர் ஒருவர், பின் வரிசையில் இரைக்காகப் போராடிய கோழிகளருகே வந்தார்.
"குருட்டுக் கோழிங்களா! எத்தனை இரை சிதறிக் கிடக்குது? அதக் கொத்த வேண்டியது தான. கிடைக்காததுக்கு சண்ட போட்டு வெறும் வயித்தோட போகப் போறீங்க. கிடைச்சத எடுத்துக்கத் தெரியாத மக்குகளா!" என்றபடி அக்கோழிகளை சிதறிய இரையின் பக்கம் இழுத்து விட்டுச் சென்றார்.
அவர் வார்த்தைகள் அவனுள் சுருக்கெனத் தைத்தன. வாய்ப்புகள் சிதறிக் கிடக்கும் இக்காலத்தில், தானும் ஒரு குருட்டுக் கோழி என்பது அவனுக்குப் புரிந்தது. சிதறிக் கிடந்த இரைகள் இப்போது அவன் கண்களுக்கும் தெரிந்தன.
புனிதா பார்த்திபன்.

உரையாடல்கள்

பால்கரசு சசிகுமார்
காரைக்குடி (இ) அபுதாபி

மனித வாழ்க்கைக்கு உரம் சேர்ப்பதே உறவுகள்தான்.

அன்பு, பாசம், பரிவு, புரிதல் போன்ற பல்வேறு உணர்வுகளைப் பரிமாறிக்கொண்டு நெருக்கமாக இருக்கவேண்டிய உறவுகள் எல்லாம் பல குடும்பங்களில் கலகலத்துக் காணப்படுகின்றன. இருவழிப் பாதையாக இருக்கவேண்டிய உரையாடல்கள் ஏனோ பல உறவுகளுக்குள் ஒருவழிப் பாதையாக இருக்கின்றன.

உரையாடல்கள் மூலமாகத்தான் இருவரின் மனங்கள் திறந்து உறவை ஆழமாக்கும். பலருக்கு உரையாடல் என்றால் என்ன என்கிற தெளிவு கிடையாது. இன்னும் சொல்லப்போனால் பல குடும்பங்களில் பெரும்பாலும் உரையாடலாக இருப்பதில்லை அது வெறும் வாக்குவாதங்களாக மட்டுமே இருக்கிறது. ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு உரையாட வேண்டிய உரையாடல்கள், இப்போது ஒருவரின் கோபத்தின் இரைச்சலாக மட்டும் மாறிவிடுகிறது. பாசத்தின் பாதை இரு வழியாக இருக்க வேண்டும். அது ஒரு வழிப் பாதையாக இருக்கக் கூடாது.

பலருக்கு உரையாடல் என்றால் என்ன என்கிற தெளிவு கிடையாது. அவர்களின் உரையாடல் என்பது, தங்களது கருத்துக்களையும் எண்ணங்களையும் பிறர் மீது திணிக்கின்ற யுத்தகளமாகத்தான் இருக்கிறது.

பலர் உரையாடல் என்கிற பெயரில் வாதாடுகின்றனர். அப்படியே உரையாடினாலும் மற்றவர்களைவிட தாங்கள் பெரியவர்கள், மேலானவர்கள், அதிகம் தெரிந்தவர்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்கான தருணமாக உரையாடலைப் பயன்படுத்துகின்றனர். இதனால் இருக்கின்ற உறவுகளையும் இழக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது!

ஒரு சிலர் உரையாடும்போது நாமே ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்று நினைக்கிறார்கள், உரையாடல்களுக்கு மத்தியில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள், இதனால் அந்த உறவுகளுக்குள் விரிசல் ஏற்படுகிறது. உறவுகளுக்குள் உரையாடும்போது தன்னுடைய பிரச்சினைகளையே பேசிக் கொண்டிருக்கக் கூடாது. மற்றவர்களின் குறைகளை குத்திக் காட்டி பேசக் கூடாது. எதிரியிடத்திலும் கூட கருணைமிக்க கண்ணியமான வார்த்தை களைப் பயன்படுத்தினால் அவர்களின் கோபமும் எதிர்ப்பும் மறைந்து உறவு மலரும்.

இன்றைய காலகட்டத்தில் ஒருவருக்கொருவர் உரையாடுவது மட்டுமல்ல. உறவினர்களிடமும், நண்பர்களிடமும் பேசுவது, நலம் விசாரிப்பது, கதைபேசி சிரித்து மகிழ்வது இதெல்லாம் குறைந்து வருகிறது. வீட்டை விட்டு வெளியில் சென்று உறவினர்களை நேரில் பார்த்துப் பேசும் பழக்கம் குறைந்துவிட்டதால் இளைய தலைமுறைக்கு உறவு முறைகளே தெரிவதில்லை.

நாம் பார்க்கும் போது மட்டும் கண்ணாடி நம் முகத்தைக் காட்டும், விலகி விட்டால் கண்ணாடி நம் முகத்தைக் காட்டாது இந்தக் கண்ணாடியின் நியதியே இன்றைய உறவு நிலைகளின் நிலைமை.

நீண்ட காலம் பழகிய நண்பர்களையே தனித்தனியே விசாரித்தால் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாத போக்கு வெளிப்படும். ஈருடல் ஓருயிர் என்று கருத்தொருமித்து வாழ்ந்து வருவதாகக் கூறிக்கொள்ளும் கணவன் – மனைவியைக் கூட தனித்தனியாக விசாரித்தால் ஒருவரைப் பற்றிய ஒருவர் கொட்டித் தீர்த்து விடுவதைப் பார்க்க முடிகிறது.

மனித உறவுகளுக்கு முட்டுக்கட்டையாய் இருப்பது 'தான்' என்னும் மாயப்பிசாசு. பல ஆண்டுகள் ஒருவரை ஒருவர் நேசித்து திருமணம் செய்துகொண்டவர்கள் கூட மாங்கல்ய மஞ்சள் காயும் முன்பே குடும்ப நீதிமன்றங்களின் கதவுகளைத் தட்டுகின்றனர். சிலர் ஒருவரை ஒருவர் பலி தீர்த்து கொள்கிறார்கள், கூடவே தன் குடும்ப உறுப்பினர்களின் நிம்மதியை சிதைத்து விடுகிறார்கள். பெரியவர்களென்று பிள்ளைகள் விட்டுக் கொடுக்கவோ பிள்ளைகளென்று பெரியவர்கள் சகித்துக் கொள்ளவோ தயாராக இல்லை.

பிடிவாதங்கள் வாழ்க்கை என்னும் வரத்தைச் சாபமாக்கி விடுகின்றன. பிறரது உணர்வுகளைப் புரிந்துகொள்ள அகந்தையும், ஆணவமும் அனுமதிப்பதில்லை. வாழ்க்கைப் பயணத்தில் நாம் சந்திக்கும் சக மனிதர்களின் உணர்வுகளையும் பிரச்சினைகளையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான், இந்த மனிதச் சமுதாயத்தின் மாபெரும் பிரச்சினைகளில் நமது பிரச்சினை ஒன்றுமே இல்லை என்பதை உணர முடியும்.

நம்மில் பலருக்கு வசதியாக வாழ்வதாகக் காட்டிக்கொள்வதில் கொள்ளைப் பிரியம். இதன் காரணமாகத்தான், பலருடைய சொல் வேறு, செயல் வேறு என்றாகிவிட்டது. பொய்யான சௌகரியங்களுக்காக, உண்மையான சந்தோஷத்தை விற்கத் தயங்காத மனப்பான்மை வளர்ந்துவிட்டது.

மனிதன் பகட்டாக ஆடம்பரமாக வாழ மட்டும் விரும்புவதில்லை. அப்படியான தனது வாழ்வை பிறர் அறிய வேண்டும் என்றும் விரும்புகிறான். வாழ்க்கை என்பது மிகக் குறுகிய காலம் தான். அதில் பணம் சேர்ப்பது மட்டும் குறிக்கோள் அல்ல. சௌகரியத்திற்காக பணம் தேவை என்றாலும் எதையும் சௌகரியமாக எடுத்துக்கொள்ளும் மனப்பக்குவம் வந்துவிட்டால் மகிழ்ச்சி தானாக வந்துவிடும்.

கணவன், மனைவியும் சம்பாதித்தால் பொருளாதார ரீதியாக குடும்பத்திற்கு நல்லதுதான். ஆனால் ஓடி ஓடி உழைத்து, சம்பாதித்து ஓரிடத்தில் உட்கார்ந்த பிறகுதான் கணவன் மனைவி இருவருக்குமே புரியும். 'எத்தனை சந்தோஷமான நாட்களை, சம்பாதிக்கும் ஆசையில் இழந்து விட்டோம்' என்பது.

வசதி இல்லாது இருந்தாலும், பல குடும்பங்களில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அந்நியோன்யமாக 'வாழ்க்கையை வாழ்க்கையாக' அனுபவிக்கின்றனர். வாழ்வின் அர்த்தமே இந்த விடுத்துக் கொடுத்தலும் அன்பின் அரவணைப்பும்தான்.

தன் சக்திக்கும் வருவாய்க்கும் உட்பட்டு கிடைக்கும் வசதிகளே போதும். அது வேண்டும்... இது வேண்டும்... என்று ஆசைப்படும் போது, அந்த வசதிகளைத் தகுதிக்கு மீறி அனுபவிக்கும் ஆசைக்கு உட்படும்போது தடுமாறவும் தவறு செய்யவும் நேரிடுகிறது. இருப்பதில் நிறைவு காணும் மனம் படைத்தவர்களால் மட்டுமே நிம்மதியான வாழ்க்கை வாழ முடியும், அப்படியானவர்கள் வாழ்கிறார்கள்.

மானுட அன்பில் எப்போதும் ஓர் எதிர்ப்பார்ப்புண்டு. தான் கொடுத்த அன்பை அது பிறரிடம் எதிர்பார்க்கும். அது கிடைக்காது போனால் அன்பு நீர்த்துப் போகும். உறவுகளுக்குள் சிறிய கோபதாபங்கள் ஏற்படுவது இயற்கை. அது தவிர்க்க முடியாதது. சொன்ன ஒரு சொல்லை அல்லது சம்பவத்தை ஊதிப்பெரிது படுத்துவதை விட்டுவிட்டு அதை மறக்கவும், மன்னிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

மனித உறவுகள் மென்மையானவை. மிக மெல்லிய இழைகளால் பிண்ணப்பட்டவை, கண்ணாடிப் பாத்திரத்தைக் கையாளும் எச்சரிக்கை உணர்வுடன் உறவைக் கையாண்டால் பிரச்சினை வராது. பெருந்தன்மை உள்ள, பேரம் பேசாத, குறை காணாத அன்பு இருந்தால் மனித உறவுகளுக்குள் உள்ள மனப்பூசல் விலகி உறவுகள் வலுப்பெறும்.

உறவுகளுக்குள் உரையாடல்கள் மூலம் வலு சேர்ப்போம் இந்த வாழ்வை இனிதாக்குவோம்.

நிலை மாறும் உலகில்...

கார்த்திகேயன் மாதயன்
திருவண்ணாமலை

சேலம் அஸ்தம்பட்டி பரபரப்பான சாலை வாகனங்கள் அங்குமிங்கும் பரபரப்பாக ஓடிக் கொண்டிருந்தன. தமிழின் ஆட்டோவில் கொஞ்சி குலாவி கொண்டு வந்த காதல் ஜோடி காந்தி ரோட்டில் இறங்கிக் கொள்ள, வேறு எதுவும் சவாரி வருமா என ஒரு ஓரமாக காத்திருந்தான்.

அப்போது அம்மாவிடம் இருந்து போன் வர, 'சொல்லும்மா' என்றான்.

'தம்பி எல்லாம் எடுத்தாச்சு... இன்னும் நக மட்டும்தான் பாக்கி' என அம்மா சொன்னபோது, ஆட்டோவின் அருகே வந்த ஒரு பெரியவர் கொஞ்சம் பதட்டமாய் "தம்பி கொஞ்சம் அர்ஜென்ட் ஜங்ஷன் வரை போகணும், வர்றீங்களா..?" என்றார்.

'போலாம் சார்" என்றதும் "எவ்வளவுப்பா..?" என்ற அவரின் கேள்விக்கு "அதிகமால்லாம் கேட்க மாட்டேங்க... இங்க இருந்து அங்க போக குறைஞ்சது 150 ஆகும், அதையே கொடுங்க" என்றதும் அவர் தலையாட்டியபடி ஏறிக் கொண்டவர் கையிலிருந்த பையை தனக்கு வலப்புறமாக வைத்துக் கொண்டார்.

தமிழ் ஆட்டோ ஓட்டிக் கொண்டே இயர் ஃபோனில் அம்மாவிடம் பேச ஆரம்பித்தான்...

'ம்ம் சொல்லுமா..'

'அதாம்பா நக மட்டும் எடுக்கணும்... கல்யாணத்துக்கு இன்னும் இரண்டு நாள்தான் இருக்கு...'

'நகதானே... தங்கச்சி கல்யாணத்தை ஜாம் ஜாம்னு முடிச்சிடலாம் நீ ஒன்னும் கவலைப்படாத. பணம் தரதா பீட்டர் அண்ணன் நம்பிக்கையா சொல்லி இருக்காரு. 'சாயந்திரம் வரும்போது அவர பாத்துட்டு நான் வீட்டுக்கு வரேன்... வச்சிடுறேம்மா'

"தம்பி ட்ரெயினுக்கு டைம் ஆச்சு கொஞ்சம் சீக்கிரமா போப்பா..." என்றார் பெரியவர்.

"சரிங்க" என்றபடி ஆக்ஸிலேட்டரை முடுக்கினான்.

பெரியவருக்கு போன் வந்தது.

'சொல்லுப்பா...'

'அப்பா அம்மா நிலைமை இன்னும் மோசமா இருக்கு கொஞ்சம் சீக்கிரமா வாப்பா ட்ரெயின் ஏறிட்டியா..?'

'இந்தா ஜங்ஷன் போயிட்டே இருக்கேன்ப்பா அஞ்சு நிமிஷத்துல ட்ரெயின் ஏறிடுவேன்...'

ஜங்ஷன் வாசலில் இறங்கிய பெரியவர் 200 ரூபாயைக் கொடுத்த கையோடு மீதம் வாங்காமல் அவசரமாய் அங்கிருந்து சென்று விட்டார்.

'50 ரூபாயை வாங்கமலே போயிருச்சே பெருசு.' என நினைத்தபடி பின் இருக்கையைப் பார்க்க அங்கே பெரியவர் மறந்துவிட்டுப் போன பை இருந்தது.

அதை எடுத்துக் கொண்டு ரயில்வே ஸ்டேஷன் உள்ளே ஓடி, எல்லாப் பக்கமும் தேடியும் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. வேறு வழி தெரியாமல் பணப்பையை பத்திரமாக ஆட்டோவில் வைத்துக் கொண்டான்.

சாயந்தரம் பீட்டரைப் பார்க்க, அவரோ இப்போது கையில் பணம் இல்லை என்று கையை விரிக்க, கவலையோடு வீடு வந்து சேர்ந்தவன், அந்தப் பையை எடுத்துக் கொண்டு உள்ளே போனான்.

"தம்பி சொன்ன மாதிரியே பணத்தை ரெடி பண்ணிட்டு வந்துட்டியா" என்று கேட்டபடி பேக்கை வாங்கிய அம்மா, அதில் நிறைய பணம் இருப்பதைப் பார்த்து, "தம்பி என்னப்பா நிறைய பணம் இருக்கு..?" என்றாள்

"என்னம்மா சொல்ற.. பணமா...?" என்ற படி வாங்கிப் பார்த்து "ஆய்யோ பாவம்... எதுக்கு எடுத்துப் போன பணமோ" என்றபடி தலையில் கை வைத்துக் கொண்டான்.

"பாவமா... அப்போ பீட்டர் கிட்ட வாங்கின பணமில்லையா இது"

"இல்லம்மா... பீட்டர் அண்ணன் இப்ப கையில பணம் இல்லைன்னு சொல்லிட்டாரு... காலையில பாப்போமுன்னு சொன்னார்" என்றவர் எல்லாரும் அப்ப இது ஏது என்பதைப் பார்க்க, காலையில் நடந்த விபரத்தை ஒண்ணுவிடாமல் சொல்லி முடித்தான்..

"தமிழ் யாரோ என்னவோ என்ன பிரச்சனையோ பேசாம பணத்தை கொண்டு போய் அவங்க கிட்டயே கொடுத்திருப்பா.." என்றாள் அம்மா.

"மோ நீ சும்மா இருமா.. இந்த காலத்துல பாவம் புண்ணியம் எல்லாம் பார்த்தா பொழைக்க முடியாது. இது அடிச்சு புடுங்குற உலகம். இவன் என்ன அடிச்சா புடுங்கனான் தானா வந்தது. இவன் அந்தப் பெரியவர தேடிப் பார்த்து கிடைக்கலைன்னு தானே வந்து இருக்கான்.கடவுள் ஒருமுறைதான் நமக்கு வாய்ப்பு கொடுப்பாரு கரெக்டா தக்க வச்சுக்கணும்" என்றான் தமிழின் நண்பன்.

"என்னடா சொல்றே..?"

"ஆமா... இந்தப் பணமும் இல்லைன்னா நம்ம தங்கச்சி வாழ்க்கை என்ன ஆகும் கொஞ்சம் நினைச்சு பாரு. நாம அசிங்கப்பட்டு தான் நிக்கணும். இப்புடி எல்லாரும் புலம்புறத விட்டுவிட்டு போய் நகை எடுத்துட்டு வர வழிய பாருங்க. பின்னாடி வர பிரச்சனைய அப்புறம் பேசிக்கலாம்".

"இல்லடா... அது தப்பு" என்றவன் தனது தங்கச்சியின் அருகில் போய் "நீ என்னம்மா சொல்ற..?" எனக் கேட்டான்.

"நீ என்ன முடிவு எடுக்குறியோ எடுணா... உன் மனசுக்கு எது சரின்னு படுதோ அதை பண்ணு. அதுல எனக்கு பூரண சம்மதம்" என்றாள்.

பணப்பையை எடுத்துக் கொண்டு அம்மாவையும் நண்பனையும் அழைத்துக் கொண்டு ஆட்டோவில் ஏறி கிளம்பினான்.

நகை கடையை தாண்டி ஆட்டோ சென்றது

"டேய் நிறுத்துடா நிறுத்துடா இங்க தான்டா.." எனக் கத்தினான் நண்பன்.

"தம்பி எங்கப்பா போற..?" என்றாள் அம்மா.

அவன் பதில் சொல்லவில்லை.

ஒரு மணி நேரத்தில் ஆட்டோ மீண்டும் வீடு திரும்பியது.

அம்மா எதுவும் பேசாமல் அழுது கொண்டே உள்ளே சென்றாள்..

"உன்னலாம் நண்பன்னு சொல்லிக்கிறதுக்கே வெக்கமா இருக்குடா..." தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்தான் நண்பன்.

"என்னண்ணா ஆச்சு..?"

"அத அவன் கிட்டயே கேளும்மா..."

"அண்ணே என்ன நடந்துச்சு..?"

தமிழ் தயக்கத்துடனே "பணத்தை போலீஸ் ஸ்டேஷன்ல கொடுத்துட்டேம்மா..." என்றான்.

"சரி விடுண்ணே அது நம்ம பணம் கிடையாது யாருக்கு போய் சேரனும்னு விதி இருக்கோ அவங்களுக்கு தான் போய் சேரும்..."

"தங்கச்சி நீ என்ன வேணா சொல்லு நான் ஒத்துக்க மாட்டேன்.
டேய்.. ரெண்டு நாள்ல கல்யாணத்தை வச்சுக்கிட்டு எப்படிடா உனக்கு இப்படி பண்ண மனசு வந்தது. அந்த புள்ள முகத்துக்காகவாவது நீ யோசிக்க வேணாமா... சீ போடா" என்று நண்பன் வெளியே கிளம்பி விட்டான்..

அன்று இரவு முழுவதும் வீடே அமைதியாக இருந்தது.

அடுத்த நாள் காலை தமிழின் வீட்டிற்கு முன் போலீஸ் ஜீப் வந்து நின்றது. தெருவே என்னவோ ஏதோ என்று பார்க்க, அதிலிருந்து காவல்துறை அதிகாரியும், பணத்தை விட்ட அந்தப் பெரியவரும் இறங்கினர்.

"டேய் தமிழ் வீட்டு வாசலில் யார் யாரோ நிக்கிறாங்கடா கொஞ்சம் வெளிய வந்து பாரு..." எனக் குரல் கொடுத்தான் நண்பன்.

வெளியே வந்த தமிழின் கையைப் பிடித்து அந்த பெரியவர்,
"தம்பி என் பொண்டாட்டி கோயம்புத்தூர்ல ஒரு ஹாஸ்பிடல்ல சீரியஸா படுத்திருந்தா அவளை குணமாக்கத்தான் இந்த பணத்தை எடுத்துட்டு நான் அவசர அவசரமா கோயம்புத்தூர் போனேன்... ஆனா அவசரத்துல பணத்தை உங்க ஆட்டோவிலேயே விட்டுட்டேன். நல்ல வேலையா நீங்க ஸ்டேஷனில் கொண்டு வந்து கொடுத்துட்டீங்க. கரெக்டான நேரத்துல இவங்களும் என் கிட்ட பணத்தை ஒப்படிச்சிட்டாங்க. நீங்க மட்டும் இல்லேன்னா என் பொண்டாட்டிய நான் பார்த்திருக்கவே முடியாது"
என்று கண்ணீரோடு கைகளைப் பிடித்துக் கொண்டார். நண்பன் தலை குனிந்திருக்க, தமிழ் தலை நிமிர்ந்து அவரைப் பார்த்து புன்னகைத்தான்.

"அன்னைக்கு ஆட்டோவில் உங்க தங்கச்சி கல்யாணத்தை பத்தி நீங்க பேசிட்டு இருந்ததை நான் கேட்டேன். இந்தாங்க இந்த பணத்தை வச்சுக்கோங்க இது உங்க நேர்மைக்கு கிடைத்த பரிசு."
என்றபடி வேனில் ஒருந்து ஒரு சிறு பேக்கை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

அடுத்த நாள் காலையில் இந்த நிகழ்வு ஃபோட்டோவுடன் பத்திரிக்கையில் வர, அதைப் பார்த்த தமிழின் தங்கச்சி மாப்பிள்ளை குடும்பத்தார், 'உங்கள் வீட்டுப் பெண்ணை கட்டிக்கொள்ள எங்களுக்கு எந்த வரதட்சணையும் வேண்டாம்' என்று கூறிவிட்டனர்.

தமிழை அந்த ஊர் மக்கள் கொண்டாடினர்.

சிட்டுக்குருவியின் சாபம்...

செழியன், மதுரை

அன்றொரு மழைநாளிரவில்
அழையா விருந்தாளியாய்ப்
பிழையாய் அவள் வந்திருந்தாள்...

அகன்ற விழிமூடி
அலகை உயர்த்தி
அழகிய சிறகினைச்
சுழற்றி உதறினாள்..

வெடவெடத்து நடுங்கியவளை
வெதுவெதுப்பாக்கிட என்
விரலகளால் வருடிவிட்டேன்...

விரல்களிடையே
விருட்சம் கண்டவள்
அழகிய அலகால் என்
அங்கம் வருடினாள்...
மென்மையாய்க் கீச்சினாள்..

அவள் கீச்சுமணிபோலவே
அலைபேசி மணியடிக்க
அரண்டுபோய்க் கிறீச்சிட்டாள்..

நானும்
அவளை அருகில் விட்டுவிட்டு
அளவளாவத் தொடங்கியிருந்தேன்...
'மரங்களைத் தொலைத்த
மனிதகுலம் மண்ணாகுமென்று...'

அசட்டை செய்துவிட்டதாய் எண்ணி
அகன்றுவிட்டாள் போலும்..
அதன்பின் அவள் வரவேயில்லை..

ஆனால் இன்றோ
குவளை நீருக்கென
கூட்டம் கூட்டமாய் அலைகிறோம்...
நாவில் நுரைதள்ள
நடையாய் நடக்கிறோம்...

அவள் கிறீச்சிட்ட சாபம்தான்
பலித்துவிட்டதோ என்னவோ...

காதலிக்க நேரம் உண்டு

சுதா திருநாராயணன்
ஸ்ரீரங்கம்



விவேக் மிகவும் தவிப்புடன் இருந்தான். இன்னும் நான்கு நாட்களே இருக்கின்றன. அதற்குள் அவளிடம் அந்த மூன்று வார்த்தைகளை கூறி விட வேண்டும். "நான் உன்னை காதலிக்கிறேன் " என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்ளும் போதே அவன் வாய் தித்தித்தது. தன் காதல் தேவதையிடம் சொல்லி அவளும் திருப்பி சொன்னால் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்த்தான். பாதாம் முந்திரி கலந்த ஐஸ்கிரீம் அவன் வாயில் கரைவது போல் இருந்தது. எதிர்வீட்டில் தான் இருக்கிறாள் ரம்யா. ஆனால் கண்ணிலேயே தென்பட மாட்டேன் என்கிறாளே. உறவினர் கூட்டம் அவளை மொய்த்துக் கொண்டிருந்தது.

விவேக்கின் மனமும் உடலும் தவித்தது. காதல் தீ அவனை சுட்டெரித்தது. அவன் மனதை முழுமையாக ஆக்கிரமித்திருந்த மூன்றெழுத்து பெயர் ரம்யா. யதேச்சையாக ஜன்னல் வழியாக ரம்யா அவனை கடைக்கண் பார்வை பார்த்தாள். விவேக்கின் பாதாதி கேசம் சிலிர்த்தது. இதுதான் சமயம் என்று கட்டியணைத்து முத்தமிட்டு "நான் உன்னை தீவிரமாக விரும்புகிறேன்" என்று கூறினால் கூட ஏற்பாள் என்று தான் தோன்றியது. மாடிக்கும் கீழேக்கும் அலைந்து எல்லா ஜன்னல்களிலும் மாறி மாறி தவம் கிடக்க ஆரம்பித்தான் விவேக். ரம்யாவை எப்படியாவது தனிமையில் சந்தித்து விட வேண்டும் என்று தாபத்துடன் தவித்தான்.

"விவேக் சீக்கிரம் சாப்பிட வா அத்தை மாமா எல்லோரும் வந்து விடுவாங்க கடைக்கு போகணும்" என்று அம்மா அழைத்தாள். அரை மனதுடன் படி இறங்கிப் போனான் விவேக். கை சோற்றை அளைந்தது.

"பொரியல் இன்னும் கொஞ்சம் வைக்கட்டுமா? அம்மா கேட்டது காதிலேயே விழவில்லை. சாம்பாரை சோற்றில் சரியாக கலக்காமல் அப்படியே விழுங்கினான். "தட்டைப் பார்த்து சாப்பிடுடா" என்று அம்மா அதட்டினாள். சாப்பாடு பிடிக்கவில்லை மனதில் காதல் கவிதைகள் ஊர்வலம் வந்தன.

ரம்யாவின் கடைக்கண் பார்வை நினைவிற்கு வந்து அவனை கிடுக்கிப்பிடியாக ஆக்கிரமித்தது. அவன் மனம் அவளோடு மௌன மொழி பேசியது. நீண்ட உஷ்ண பெருமூச்சை வெளியிட்டான். விவேக்கின் அலைபேசி அடித்தது. கோபால்தான் பேசினான். என்னடா நினைத்ததை சாதித்து விட்டாயா? குறுமபும் ஆர்வமும் கொப்பளிக்க கேட்டான் கோபால்.

"போடா நீ ஒருத்தன் அவளை தனியாவே பார்க்க முடியல வீட்ல ஜே ஜே னு திருவிழா மாதிரி கூட்டமா சொந்தக்காரங்க வந்து என் உயிரை வாங்குறாங்க. கோபால் சிரித்தான். "காதல்னா என்ன சும்மாவா? ட்ரை ட்ரை ட்ரை.

கடந்த சில நாட்களாக விவேக் சரியாக தூங்காமல் சரியாக சாப்பிடாமல் கனவுகளின் ஆட்சியில் இருந்ததனால் உன்மத்தம் பிடித்தவன் போல் இருந்தான். ரம்யாவின் விழிகளின் கிறக்கம் அவனை போதை கொண்டவனாக மாற்றி விட்டிருந்தது.

வாசலில் சென்று எட்டிப் பார்த்தான் போன் செய்யலாம் என்றால் அவள் போன் அவளிடம் இல்லை போலிருக்கிறது. போனில் கேம் விளையாடிக் கொண்டிருந்த ஏதோ ஒரு வாண்டு ஒன்று போனை எடுத்து அக்கா உனக்கு போன் என்று அலறியது இவன் காதில் விழுந்தது. எதுவும் பேச பிடிக்காமல் லைனை துண்டித்தான்.

அவள் முகத்தை பார்க்காமல் இருந்தாலும் அவள் குரலை கேட்காமல் இருந்தாலும் தன் அன்பிற்கும் காதலுக்கும் ரம்யா மட்டுமே உரித்தானவள் என்பதை அவளிடம் எப்படி சொல்லுவது என்று படபடத்தது விவேக்கின் மனம்.

"இப்படிச் செய்தால் என்ன என்று யோசித்தான் விவேக் ஏதாவது ஒரு வாண்டு ஒன்றை பிடித்து அதன் மூலம் செய்து ஏதாவது அனுப்பலாமா அவளுக்கு.?

ஐந்து நிமிடம் அவளுடன் பேச தனிமையில் சாவகாசம் கிடைத்தால் போதும் என் மனதில் உள்ளவற்றை கொட்டி விடுவேனே என்று நினைத்தான் விவேக்.

எந்நேரமும் யாராவது அவள் வீட்டில் இருந்து கொண்டே இருந்தார்கள்.

ஒரு ஜாக்பாட் அடித்தது விவேக்கிற்கு. ரம்யா வீட்டில் வந்திருந்த விருந்தினர்கள் எல்லோரும் எங்கோ புறப்பட்டு போய்க்கொண்டிருந்தார்கள். தன் வீட்டு வாசலில் மறைந்திருந்து அம்மா பார்க்காத வண்ணம் சட்டென்று ரம்யா வீட்டு கேட்டை திறந்து கொண்டு நுழைந்தான் விவேக். தாளிடாத வாசல் கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். ரம்யா கூடத்தில் துணிகளை மடித்துக் கொண்டிருந்தாள். அவள் கைகளில் மருதாணியும் கண்களில் மையும் மின்னியது.

சட்டென்று அவளை வாரி அணைக்க நினைத்தவன், மருதாணி இட்ட அவள் கரங்களை பற்றி தன் நெஞ்சில் வைத்துக் கொண்டு "எனக்கு உன்ன மட்டும் தான் பிடிக்கும் உன்னைத்தான் பிடிக்கும்" என்று அவள் காதில் கிசுகிசுத்தான். பட்டென்று அவனை உதறித் தள்ளினாள் ரம்யா.

"என்ன பிஹேவியர் இது? இதுக்கு முன்னால பீச்லயும் ஹோட்டலிலும் சினிமாவிலயும் சொல்லாததையா இப்ப புதுசா சொல்லுற நீ? அதுவுமில்லாம எவ்வளவு கஷ்டப்பட்டு, தவமாய் தவம் கிடந்து நம்ம கல்யாணத்துக்கு பெரியவங்க கிட்ட சம்மதம் வாங்கி இருக்கோம். பெத்தவங்க சம்மதம் இல்லாம கல்யாணம் பண்ணிக்க கூடாதுன்னு தானே இதனை நாள் பொறுமையா காத்திருந்தோம். நம்ம காதல என்ன அவ்வளவு குறைச்சலா மதிப்பு போட்டுட்டியா ? அத்தை மாமா யாராச்சும் வந்து இப்ப பார்த்தாங்கன்னா உன்னையும் என்னையும் பத்தி என்ன நினைப்பாங்க?" என்றாள் கோபத்துடன் ரம்யா.

"அதுவும் இல்லாமல் திடீர்னு என்ன ஐ லவ் யூ இப்போ. கல்யாணமோ நிச்சயம் ஆயிடுச்சு நமக்கு. " கோபமும் நாணமும் அவள் முகத்தில் ஒருங்கே கோலமிட்டது.

ரம்யா ரொம்ப சாரி ரம்யா. இன்னும் நாலு நாள்ல உனக்கு நான் ஹஸ்பண்ட் ஆயிடுவேன். ஒரு லவ்வரா உனக்கு ஒரு தடவை ஐ லவ் யூ சொல்லணும்னு ரொம்ப ஆசையா இருந்தது. அதனாலதான் இப்படி பண்ணினேன். கல்யாணத்துக்கு அப்புறம் நமக்குள்ள இருக்கிற காதலில ஒரு பக்குவம் பொறுப்பு வந்துடும் இப்போ ஒரு தடவை கொஞ்சம் ஃப்ரீயா சொல்லணும்னு ஒரு ஆசை." என்றான் விவேக் தாபத்துடனும் ஆசையுடனும். உண்மையான காதல் ஓர் அன்பு தவமாய் காட்சியளித்தது அங்கே.

ரோந்த் (Ronth - மலையாளம்)



பரிவை சே குமார்

சமீபமாய் காவல்துறை என்பது தனி இராஜ்ஜியம், என்ன வேண்டுமானாலும் எங்களால் செய்ய முடியும் என்பதாய் நாம் கண்டு கொண்டிருக்கும் வேளையில் காவல்துறையை கதைக்களமாய்க் கொண்டு சமீபத்தில் மலையாளத்தில் இரண்டு படங்கள் வெளிவந்திருக்கின்றன. இரண்டும் வெவ்வேறு கதைக்களம். அதில் ஒன்றுதான் 'ரோந்த்'. நாம் இதை அழகிய தமிழில் 'PATROL' என்றும் கிராமியத் தமிழில் 'ரோந்து' என்றும் சொல்வதுண்டு.

மெய்யழகனில் இரண்டு கதாபாத்திரங்களை ஒரு இரவு முழுவதும் பேசிக்கொண்டே இருக்க வைத்து வாழ்வியலை மிக அழகாக நமக்குக் காட்டியது தமிழ்ச் சினிமா. ஆனால் அப்படியான படங்கள் இங்கே அதிகம் வருவதில்லை. இங்கே நாயகப் பிம்பமும் பில்டப்புமே மிக முக்கியமானதாக இருக்கிறது, மலையாளிகளும் இப்போது இப்படியான படங்களை எடுத்தாலும் வித்தியாசமான கதைக்களங்களில் அடிக்கடி பயணித்து அதிலும் வெற்றி காண்கிறார்கள்.

காவல்துறை படங்கள் என்றாலே அதிரடியாய், நாயக பிம்பத்தின் சாகசங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும். 'ஆக்சன் ஹீரோ பிஜூ' படத்தில் காவல்துறையின் மாறுபட்ட பக்கத்தைக் காட்டியிருப்பார்கள். அதன் தொடர்சியாய், அப்படியான கதைகளில் சில படங்கள் வர ஆரம்பித்தன. அதிலொன்றுதான் இந்த 'ரோந்த்'.

நகரில் ஒரு நாள் - பெரும்பாலும் இரவில் - ஜீப்பில் ரோந்து போகும் 25 வருட கால அனுபவம் கொண்ட சப் இன்ஸ்பெக்டரும், புதிதாய் வேலைக்குச் சேர்ந்து ஜீப் டிரைவாக இருக்கும் கான்ஸ்டபிளும் பார்க்கும் நிகழ்வுகள், தீர்த்து வைக்கும் சச்சரவுகள் மட்டும்தான் கதை.

இருவருக்குள் சின்னதாய் ஒரு ஈகோ பிரச்சினை இருப்பதுதான் கதையின் போக்கை இன்னும் சுவராஸ்யமாக்கியிருக்கும். பல இடங்களில் சின்னச் சின்ன மோதல்களும், காரசாரமான விவாதங்களும் இருவருக்குள்ளும் நிகழ்ந்தாலும் கான்ஸ்டபிளின் குழந்தைக்கு உடம்பு முடியலை என்ற செய்தி வந்ததும் தனது முரட்டுக் குணத்தை புறம் தள்ளி குழந்தையை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் இடம், அங்கு கிண்டல் பண்ணுபவர்க்கு சிறப்பான பதிலடி கொடுக்கும் இடம் என ஈகோவும் அதை வென்ற இடங்களுமாய் படம் நகரும்.

கான்ஸ்டபிள் அடிக்கப் போகுமிடத்தில் தடுப்பது, கேள்வி கேட்காமல் விட்ட இடத்தில் ஏன் விட்டே எனக் கத்துவது, பட்டுத் தெரிந்து கொள் எனக்கு அனுபவ அறிவு இருக்கு என சில இடங்களில் விட்டுவிட்டு நமுட்டுச் சிரிப்பு சிரிப்பது, மனைவியின் சந்தேகத்துக்கு சிரித்தபடி, ஒரு குழந்தைக்குப் பதில் சொல்வது போல் சொல்லிச் செல்வது, அத்தனை அழுத்தமான மனநிலை கொண்டிருந்தாலும் குழந்தைகளுக்கு ஒன்றென்றால் விஸ்வரூபம் எடுப்பது, செய்யாத தவறுக்கு தண்டனை கிடைத்ததும் காட்டும் அழுத்தம் என இன்ஸ்பெக்டராக திலீஷ் போத்தன் கலக்கியிருக்கிறார்.

அதேபோல் எதற்கும் உண்மையாக இருக்கணும், பணத்துக்காக எதையும் செய்யக்கூடாது என நினைக்கும் கான்ஸ்டபிளாய், ஒவ்வொரு நிகழ்விலும் சப்-இன்ஸ்பெக்டரிடம் ஏதோ ஒரு விதத்தில் அடிபட்டு, அதை எப்படியாவது திரும்பிக் கொடுக்கணும் என நினைத்து இரவெல்லாம் பயணிப்பதும், சதி வலைக்குள் விழுந்தது தெரிந்து எடுக்கும் முடிவும் ரோஷன் மாத்யூ தனது கதாபாத்திரத்திற்கு செய்திருக்கும் சிறப்பு.

ரோந்து என்பதால் தொடர்ச்சியான கதைக்களம் எதுவுமில்லாமல், சின்னச் சின்ன நிகழ்வுகள், அவற்றிற்கான தீர்வுகள் என நகரும் கதைக்குள் வீட்டை விட்டு ஓடிப்போன ஒரு பெண் சார்ந்த கதையின் தொடர்ச்சி மட்டும் அந்த இரவில், நகர் முழுவதும் பயணித்துக் கொண்டே இருக்க, அதற்கான தீர்வு என்ன என்பதுதான் படத்தின் முடிவு.

இதில் காவல்துறையில் இருக்கும் நியாயமானவர்களையும் மோசமானவர்களையும் காட்டியிருக்கிறார் இயக்குநர். இப்படியான நிகழ்வுகள், பலி வாங்கல் உள்ளுக்குள் இருந்து கொண்டேதான் இருக்கிறது என்பதைச் சொல்லும் கதைக்களத்தில் இரு பாவப்பட்டவர்களை தங்களது பசிக்காகப் பயன்படுத்திக் கொண்டு விட்டார்களே என்ற வருத்தத்தை நமக்குள் அழுத்தமாய் பதிந்ததில் வெற்றி பெற்றிருக்கிறது 'ரோந்த்'.

ரோந்து ஆரம்பிக்கும் போது இருவருக்குள்ளும் இருக்கும் சின்னச் சின்ன உரசல்களை மெல்ல மெல்ல நமக்குள் இறக்கி முடிவில் நம்மை ஜெயித்திருப்பார் இயக்குநர் ஷாஹி கபீர். இவர் இயக்கிய முதல் படம், சிறந்த இயக்குநருக்கான மாநில விருதைப் பெற்றுக் கொடுத்த 'இல வீழா பூஞ்சிறா'. காவல்துறையில் பணியாற்றியவர் என்பதால் இவர் காவல்துறையின் மற்றொரு பக்கத்தை, யாரும் சொல்லாத பக்கத்தை, தொடாத பக்கத்தை தனது படத்தில் காட்டுவதை விரும்புவதுடன் அதை அப்படியே, மிக அழகாக காட்டவும் செய்கிறார். இவர் 'ஜோசப்', 'நாயாட்டு', 'ஆபீசர் ஆன் டூட்டி' போன்ற காவல்துறை சம்பந்தப்பட்ட படங்களுக்கு திரைக்கதை எழுதியவரும் இவரே.

இதேபோல் திலீஷ் போத்தன் இயக்குநராய் மகேஷிண்டே பிரதிகாரம், தொண்டிமுதலும் த்ரிசாக்சியும், ஜோஜி போன்ற வெற்றிப் படங்களின் இயக்குநர் ஆவார்.

மனீஷ் மாதவன் தனது சிறந்த ஒளிப்பதிவில் இரவு நேர காட்சிகளை நாம் நேரில் பார்ப்பது போல் காட்சிப்படுத்தியிருக்கிறார். அதேபோல் அனில் ஜாக்சனின் பின்னணி இசை படத்துக்குப் பெரும் பலம். பிரவின் மங்கலத்-தின் படத்தொகுப்பு மெல்ல நகரும் கதையில் அசதி ஏற்படாத வண்ணம் சிறப்பாக இருக்கிறது. மற்ற கதாபாத்திரங்கள் அனைவருமே அவரவர் கதாபாத்திரங்களை மிகச் சிறப்பாக செய்திருக்கிறார்கள்.

சப்-இன்ஸ்பெக்டருக்கு குழந்தைகள் மீதான பற்று எதனால் என்பதை ஆரம்பக் காட்சியிலேயே புரிந்து கொள்ள முடிந்தவர்களுக்கு அவரின் அந்தப் பற்று பெரும் தாக்கத்தை ஏற்படுத்தாது என்றாலும் ஒரு பதட்டத்தைக் கொடுக்கத்தான் செய்யும். ரோந்தில் குறைகள் இல்லையா என்றால் இருக்கத்தான் செய்கிறது என்றாலும் நிறைவாய் நிற்கும் காட்சிகளால் குறைகள் நமக்குப் பெரிதாகத் தெரியவில்லை.

ரோந்த் - சின்னச் சின்ன மனதைக் கலங்கடிக்கும் கதைகளுடன் கன்னூர் வட்டம் தர்மசாலாவின் அழகிய இயற்கை காட்சிகளுடன் பயணிக்கும் கதை, காவல்துறையின் மிருக குணமில்லாத மற்றொரு பக்கத்தை, சாகசங்களை விரும்பாமல் நடப்பை, எதார்த்தத்தை, பார்க்க விரும்பும் அனைவரும் பார்க்கலாம்.

Hello DUBAI

Say hello to luxury, adventure, and unforgettable moments. Dubai welcomes you with open arms!

FJ Tours and Travels

UAE : +971564333826

India : +918925813513

Elevate Your Brand with Precision Printing

PrinTech Solutions
Your Print Partner

Your premier partner for top-tier printing solutions!

PrinTech Solutions LLC

WHY CHOOSE US

- Unparalleled Quality
- Swift Turnaround
- Dependable Service
- Innovation at its Finest
- Eco-Friendly Practices

OUR SERVICES

- *Digital Printing*
- *Custom Design Services*
- *Packaging Solutions*
- *Stationery Printing*

CONTACT US TODAY
sales@printechuae.com
+971 58 124 1941